# அக்கினி ரதங்கள்

Ps. ஆஸ்வின் ஜேம்ஸ்டட்

SEPTEMBER 2019



# அக்கினி ரதங்கள்

Ps. ஆஸ்வின் ஜேம்ஸ்டட்

# முகவுரை

இந்த புத்தகத்தில் அச்சிடப்பட்டுள்ள செய்திகள் நம்முடைய போதகர் ஆஸ்வின் ஜேம்ஸ்டட்டால் நம் சபையில் புதன் கிழமை மற்றும் சனிக்கிழமை இரவு நடைபெறும் வேதாகம பயிற்சி வகுப்பில் பிரசங்கிக்கப்பட்ட வார்த்தைகள்.

நாங்கள் இந்த புத்தகத்தை மிகுந்த ஜெபத்தோடும் பிரயாசத்தோடும் உங்கள் ஆவிக்குரிய அதிகாரத்தையும், வல்லமையையும் அறிந்து கொண்டு, இருள் நிறைந்த இந்த உலகத்தை வென்று தேவனால் உங்களுக்கான தேவ சித்தத்தை அடைய உருவாக்கியுள்ளோம்.

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| ஆவியால் வழிநடத்தப்படுதல் | *1* |
| தேவனுடைய ராஜ்ஜியம் | *6* |
| நாவின் அதிகாரம் | *17* |
| பில்லிசூனியத்தை ஜெயித்து வாழ்வது எப்படி? | *26* |
| உயிர்பிக்கும் சாட்சிகள் | *36* |

# ஆவியால் வழிநடத்தப்படுதல்

நீங்கள் ஒவ்வொரு நாளும் கர்த்தரிடமிருந்து ஆவிக்குரிய வெளிப்பாடுகளைப் பெற முடியுமா? ஆம்.... முடியும்.

தேவன் மோசையையும் இஸ்ரவேல் ஜனங்களையும் ஒரு புதிய இடத்திற்கு அழைத்துச் சென்றார். அது இஸ்ரவேல் மக்களின் திட்டத்தில் இல்லை. ஒருபோதும் அவர்கள் அதை அறிந்ததில்லை. அதை பார்த்ததில்லை. ஆனால், தேவன் ஏன் அவர்களை அப்படி அழைத்துச் சென்றார்? காரணம், ஒவ்வொரு அடியிலும் அவரைச் சார்ந்து இருக்கும்படி தேவன் விரும்பினார். இஸ்ரவேல் மக்கள் மோசேயைச் சார்ந்து இருந்தார்கள். ஒவ்வொரு முறையும் அவர்கள் தங்கள் வாழ்க்கையை வாழ விரும்பினார்கள். அவர்கள் மோசேக்கு எதிராக கலகம் செய்தனர். அவர்கள் எப்போதும் முன்னேற்றத்தை அறிந்து ஒரு திட்டத்தை வைத்திருக்க விரும்பினர்.

பல முறை நாம் நம் சுய திட்டங்களின் படி வாழ முயற்சிக்கிறோம். நம் திட்டங்களைச் சார்ந்து இருக்கிறோம். நம் திட்டத்தின் மூலம் தான் நாம் வாழ வேண்டும் என்று நினைக்கிறோம். நம் திட்டத்தின் மூலம் வாழ்வது என்பது சரீர ரீதியான வாழ்க்கை முறை. நீங்கள் கேட்கலாம். வேறு என்ன பாஸ்டர்? நாங்கள் எப்படி வாழ வேண்டும்? உங்கள் திட்டத்தில் வாழ்வதன் மூலம் நீங்கள் மாம்சத்திலும், ஆத்மாவிலும் வாழ்கிறீர்கள். ஆனால் தேவன் உங்களை ஒரு ஆவியாக வாழ அழைத்திருக்கிறார்.

நீங்கள் ஒரு வெற்றிகரமான வாழ்க்கையை வாழ விரும்பினால், உங்கள் வாழ்க்கையின் தீர்க்கதரிசனங்கள் வெளிப்பட வேண்டுமென்றால், நீங்கள் ஆசீர்வதிக்கப்பட விரும்பினால், அது எல்லாமே ஆவியிலே இருக்கிறது. நாம் ஆவியோடு இணைந்திருக்க வேண்டும். ஆவியால் நடத்தப்படுவது என்னவென்றால், நம் சரீரத்தினாலோ அல்லது ஆத்துமாவினாலோ, அல்லது நம் உணர்ச்சிகளாலோ நாம் வழிநடத்தப்படக் கூடாது என்பதே.

நாம் பழைய ஏற்பாட்டில் பார்க்கும் போது மக்களின் ஆவி உயிரற்றதாயிருந்தது. தேவனின் ஆவியோடு இணைந்திருக்கவில்லை. ஆனால் மோசேயின் ஆவி உயிருள்ளதாயும், தேவனோடு இணைந்ததுமாயிருந்தது.

வனாந்திரத்தில் மக்களை வழிநடத்தும் போது மோசேயின் திட்டம் எங்கே? அது ஆவிக்குரியதாக இருந்தது. மோசேயின் மனம், உணர்ச்சிகள் மற்றும் தர்க்கரீதியான புரிதல் அதை அறியவில்லை. மோசேயின் உணர்ச்சிகள் சில நேரம் அலைந்து திரிந்தன. அதனால், அவர் தேவனுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். மக்களை வனாந்திரத்தில் வழிநடத்திச் செல்ல வேண்டிய தலைவர், ஜி.பி.எஸ் அல்லது வரைபடம் இல்லாததால் தெளிவில்லாமல் இருந்தார். அவரது திட்டம் அவரது ஆவிக்குள் இருந்தது.

நீங்கள் வனாந்தரத்தில் இருக்கலாம், உங்கள் மீது தீர்க்கதரிசனங்கள் பேசப்பட்டு இருக்கலாம், உங்களுக்கு தேவனுடைய வார்த்தை கொடுக்கப்பட்டு இருக்கலாம். ஆனால் அது வெளிப்படாமல் இருப்பதால் முன்னோக்கி செல்லாமல் இருக்கிறீர்கள். அதற்கு காரணம் நீங்கள் ஆவியுடன் இணைந்திருக்கவில்லை.

தீர்க்கதரிசனங்கள் ஆவியிலே கொடுக்கப்பட்டிருந்தாலும் மக்கள் ஆவியோடு ஒத்துப்போகாததால் அவர்கள் சுற்றித் திரிகிறார்கள். அவர்கள் எப்போதும் பரிசுத்த ஆவியின் நகர்வுக்கு எதிராக போராடுகிறார்கள். மோசேக்கு எதுவும் தெரியாது. ஆனால் எல்லாமே அவருடைய ஆவியில் தான் இருந்தது.

மோசே செங்கடலைக் கடந்து வந்த போது அவருக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை வனாந்திரத்தில் எப்படி செல்வது? வுனாந்திரத்தில் எப்படி வேலைசெய்வது? ஏந்த திசையில் செல்லவேண்டும்? எங்கிருந்து தண்ணீர் மற்றும் உணவு கிடைக்கும் என்று தெரியவில்லை. கானான் எந்த திசையில் இருக்கிறது என்பது கூட அவருக்குத் தெரியாது.

ஆனால் தேவனுடைய ஆவி அவரை எல்லா வகையிலும் வழிநடத்தியது போலவே, அவர் தொடர்ந்து சென்றார்.

மேகத்தூண் நகர்ந்த போது, மோசேயும் இஸ்ரவேலரும் நகர்ந்தார்கள். மக்கள் தேவனுடைய மகிமையைக் கண்டார்கள். ஆனால், மோசே தேவனுடைய வழிகளை அறிந்திருந்தார். என்று வேதம் கூறுகிறது. மக்கள் கண்மூடித்தனமாக மோசேயைப் பின் தொடர்ந்தார்கள். மக்கள் கண்களால் மாத்திரம் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் மோசே ஆவியால் நடத்தப்பட்டார்.

பின்னர் மாரா என்னும் ஒரு இடம் வ்நதது. ஆங்கு தண்ணீர் கசப்பாகவும் மக்கள் குடிக்கவும் முடியவில்லை. ஆகவே, நாங்கள் எதை குடிப்போம் என்று மக்கள் மோசேயிடமும் மீது முறுமுறுத்தார்கள். மோசே கர்த்தரிடம் மிகுந்த ஜெபம் செய்தார். கர்த்தர் அவருக்கு ஒரு மரத்துண்டைக் காட்டினார். அதை அவர் தண்ணீரில் எறிந்தார் தண்ணீரின் கசப்பு மாறியது.

ஊங்கள் ஆசிர்வாதத்தின் அடுத்த கட்டம் ஆவியில் உள்ளது. அது நீங்கள் பார்க்கும் பார்வையில் இல்லை. நீங்கள் வேலை பார்க்கும் மேலாளரிடம் இல்லை. நீங்கள் பார்க்கும் பெரிய அலுவலக அறையில் இல்லை. அடுத்து இருக்கும் மாலில் இல்லை. அமெரிக்காவில் கூட இல்லை. ஆனால் அது உங்கள் ஆவியில் இருக்கிறது. ஆகவே, பார்க்கவோ, கேட்கவோ சிந்திதக்கவோ முயற்சி செய்யாதீர்கள். ஆனால் அதை எப்போதும் உங்கள் ஆவிக்குள் கொண்டு செல்லுங்கள்.

தேவன் சொல்கிறார், எல்லாம் ஆவியில் தான் இருக்கிறது. பிசாசு ஆவியைத் தொட முடியாது. உங்கள் மீது பேசப்பட்டது ஆவியிலே இருக்கிறது. நாம் அதை விட்டுவிட்டு நம் மாம்சத்தில் அடைய முயற்சிக்கிறோம். ஆனால் அது நம்முடைய ஆவிக்குரியது.

**அறிக்கை செய்வோம்:**

**கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்கள் தங்கள் ஆவியில் பெறுவார்கள்.**

தேவன் ஒரு ஆவி. அவர் ஆவியாய் மட்டுமே செயல்பட முடியும். நம்மில் சிலர் இன்னும் பல மாதங்காளாக ஒரே இடத்தில் இருக்கிறோம். இப்படியே இருக்கலாம் என்று நினைக்கிறோம். நாம் பெற்றவை அனைத்தும் ஆவிக்குரியவை.

அதை ஆவியில் பராமரித்து நிலைநிறுத்த வேண்டும். பிசாசு ஒரு கர்ச்சிக்கிற சிங்கம் போல யாரைப் பார்த்தாலும் விழுங்க முயற்சிக்கிறான். உங்கள் ஆவியில் இரட்சிக்கப்பட வேண்டும். நீங்கள் அடுத்த நிலைக்குச் செல்லவில்லை என்றால், நீங்கள் அதே நிலையில் தேங்கி நிற்பீர்கள். உயிரினங்கள் வளர்கின்றன. நீங்கள் ஏதாவதொரு செயல்பாட்டில் இருக்க வேண்டும்.

தேவன் இஸ்ரவேலருக்கு ஒரு நேரத்தில் ஒரு விஷயத்தைக் கொடுத்ததற்கு அதுவே காரணம். ஏனெனில் ஒரு நேரத்தில் ஒரு ஆவிக்குரிய விஷயம் மட்டுமே வெளிப்படுத்தப்பட்டது. அவர்கள் மோசமான மனிதர்கள் அல்ல.

**பிலிப்பியர் 4: 6,7.**

**6. நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்.**

**7. அப்பொழுது எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளகாகக் காத்துக் கொள்ளும்.**

இஸ்ரவேலர் மாம்சத்தில் நடக்க முயன்றனர். அவர்கள் பார்த்ததைக் கொண்டு அவர்கள் நடந்தார்கள். ஆனால் மோசே ஆவியில் நடக்க வேண்டும் என்று தேவன் விரும்பினார். நாம் ஒரு ஆவி. தேவன் ஒரு ஆவி. எனவே, தேவ ஆவிக்கு ஏற்ப நாம் நகர வேண்டும்.

தேவாலயம் ஞாயிற்றுக் கிழமை மட்டும் வந்து திரும்பிச் செல்கின்ற ஒரு இடம் அல்ல. தேவாலயம் என்பது ஒரு

குடும்பம். அங்கு நாம் ஒன்று கூடி ஜெபம் செய்து பெற்றுக் கொள்கிறோம்.

நாம் ஒருவருக்கொருவர் அக்கறை செலுத்துகிறோம். இங்கு சொல்லாப்படுவதை நீங்கள் நம்பினால் நீங்கள் இந்த குடும்பத்துடன் வளர்ந்து எழுந்திருப்பீர்கள். நீங்கள் ஒரு பெரிய காரியத்திற்கு அழைக்கப்பட்டு இருக்கிறீர்கள்.

அழைப்பு பெரியதாக இருக்கும் போது ஆவிக்குரிய போராட்டங்களும் அதிகமாக இருக்கும். நீங்கள் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் எழுப்பப் படுவீர்கள்.

“நான் மகிமையிலிருந்து மகிமைக்குச் செல்வேன் பலத்தின் மேல் பலனடைவேன்” என்று சொல்வது நல்லது. நீங்கள் அதைச் சொல்லும் போது உங்களுக்குள் போராட்டம் அதிகரிக்கிறது. நீங்கள் அதை கேட்கவும் கற்றுக் கொள்ளவும் விண்ணப்பிக்கவும் வேண்டும். நீங்கள் இணைக்கப்பட வேண்டும். நீங்கள் ஜெபித்தால் நீங்கள் தேவ பிரசன்னத்துடன் இணைக்கப்படுவீர்கள். நீங்கள் ஆவியால் வழிநடத்தப்படுவீர்கள். என்ன செய்வது என்று உங்களுக்குத் தெரியும் ஆமென்.

# தேவனுடைய ராஜ்யம்

ராஜாவும் ராஜாவின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட பகுதியும் ராஜ்யம் எனப்படும். ஒரு ராஜ்யம் ஒரு ராஜாவை மையமாக கொண்டது. ராஜா இல்லாது ராஜ்யம் இல்லை. அவர் தனக்கு உட்பட்ட பிரதேசத்தை ஆதிக்கம் செலுத்துகிறார், அதில் உள்ள மக்கள் அவருக்கு வரி செலுத்துகிறார்கள், அந்த ராஜ்யத்தை அவர் ஆட்சி செய்கிறார்.

தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றி சிந்திக்கும்போது சில வசனங்கள் நம் நினைவுக்கு வருகின்றன. மத்தேயு 6: 33-ல் இயேசு தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றி பேசுகிறார்,

**முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்; அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும். மத்தேயு 6:33**

இவ்வசனத்தில் "இவைகள் எல்லாம்" என்று இயேசு சொல்லும் விஷயங்கள் நமக்குத் சரீரப்பிரகாரமாகவும் ஆவிக்குரியவகையிலும் தேவைப்படுபவை. நாம் தேவனுடைய ராஜ்யத்தை நாடினால் ஒவ்வொரு விஷயங்களும் நம் வாழ்வில் சேர்க்கப்படும்.

தேவனுடைய ராஜ்யம் எங்கே, எப்போது வரும் என்பதை பரிசேயர்கள் புரிந்துகொள்ள முயன்றார்கள்.

லூக்கா 17:20-21 இல் இதை காண்கிறோம்

**20 - தேவனுடைய ராஜ்யம் எப்பொழுது வருமென்று, பரிசேயர் அவரிடத்தில் கேட்டபொழுது, அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக. தேவனுடைய ராஜ்யம் பிரத்தியட்சமாய் வராது.**

**21 - இதோ, இங்கே என்றும், அதோ, அங்கே என்றும் சொல்லப்படுகிறதற்கும் ஏதுவாயிராது; இதோ, தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறதே என்றார்.**

வேதாகமத்தின் மற்றொரு மொழிபெயர்ப்பில் ***“தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறது”*** என்று எழுதப்பட்டுள்ளது. தேவனுடைய ராஜ்யம் நம்மில் இருக்கிறது.

இயேசு “தேவனுடைய ராஜ்யத்தைத் தேடுங்கள்” என்று கூறுகிறார். தேவனுடைய ராஜ்யம் நம்மில் இருக்கிறது.தேவன் நம்மில் ஆளுகை செய்கிறார் . "நாம்" என்பது ஒரு ஆவி, ஆத்மா சரீரம் என்ற முப்பரிமாணம், ஆத்துமா நம் உலகப்பிரகாரமான பழக்கவழக்கத்தையும் வெளித்தோற்றத்தை நிர்ணயிக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். மேலும் தேவனுடைய ஆவியானவர் நமக்குள் வாழ்கிறார் என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும்.

1 கொரிந்தியர் 2:9 உள்ள வசனத்தை காண்போம்

**எழுதியிருக்கிறபடி தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காதுகேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை;**

முதலாவது , தேவன் நமக்காக ஆயத்த படுத்தியிருப்பது நம் சரீரத்திற்கு தெரியாது. ஏனெனில் நம் சரீரம் நம் உணர்ச்சிகளின் அடிப்படையில் இயங்குகிறது. இரண்டாவதாக "மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை" என்பதின் அர்த்தம் நம் ஆத்துமாவிற்கும் நம் வாழ்வில் தேவனுடைய திட்டம் என்ன என்பது தெரியாது.

இருதயம் அல்லது ஆத்மா என்பது தர்க்கரீதியான (logical) மற்றும் உணர்ச்சிகளின்(emotion) உறைவிடம். சில நேரங்களில் நாம் தேவன் நமக்கு செவிகொடுக்காதது போலவும் , நாம் நினைத்த -
-படி எதுவும் நடக்காதது போலவும் எண்ணி சோர்ந்து

போகிறோம். ஏனெனில் தேவனுடைய வழி என்ன என்பது நம் ஆத்மாவிற்கு தெரியாது.

ஆனால் அவைகளை நம் ஆவிக்கு வெளிப்படுத்திருக்கிறார். நம் ஆவிக்கு மட்டுமே அது தெரியும். எனவே இயேசு சொல்கிற ***"தேவனுடைய ராஜ்யம்"*** என்பது தேவனும் அவருடைய ராஜ்யமும் நமக்குள் இருக்கிறது என்பதை வெளிப்படுத்தும்.

நீதியும், சமாதானமும், மகிழ்ச்சியும் ஆவியோடு இணைந்த உணர்ச்சிகள். இயேசுவின் ஆவியுடன் இணைந்தவர்கள் மட்டுமே இந்த உலகில் உண்மையான மகிழ்ச்சியையும் சமாதானத்தையும் பெற்றுக்கொள்ளமுடியும். மற்ற ஆவியுடன் இணைந்த ஒவ்வொரு நபரும் அந்த ஆவியின் குணங்களை பெற்றுக்கொள்வார்கள். மகிழ்ச்சியையும், சமாதானத்தையும், ஞானத்தையும் தரும் ஒரே ஆவி இயேசு. ஆகவே தேவனுடைய ராஜ்யம் நம்முடைய ஆவிக்குரியது. கர்த்தர் , நம் மூலமாகவும் நம்மைச் சுற்றிலும் ஆதிக்கம் செலுத்துவதே தேவனுடைய ராஜ்யம். ஆகவே, தேவன் உங்களுக்காக வைத்திருக்கும் விருப்பத்தையும், திட்டத்தையும் தேடுங்கள்.

நம் மனதிற்கும் அதின் உணர்ச்சிக்கும் சரியாக படுகிற காரியங்களை தேடுவதால் நாம் மன அழுத்தத்திற்கு

(Stress) உள்ளாகிறோம் . நாம் காண்கிற மற்றும் கேட்கிற விஷயங்களை கொண்டு நம் உணர்ச்சிகள் மாறுகின்றது. மேலும் நம் அனுபவங்களை அடிப்படையாக கொண்டு உணர்ச்சிகளை வெளிப்படுத்துகிறோம்.

தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் , ஆவி நம்மைப் பற்றி என்ன சொல்கிறது என்பதை கொண்டு நடக்க அழைக்கப்பட்டு இருக்கிறோம். "நான் இளவயதில் மரிக்க மாட்டேன், நான் நீண்டகாலம் வாழ்வேன்" என்று நீங்கள் கூறும்போது, அதை உங்களால் நம்ப முடிந்தால், உங்கள் மனதிலும் உங்கள் உணர்ச்சிகளிலும் நீங்கள் சலனமில்லாமல் இருப்பீர்கள்.

நாம் சர்வவல்லவரின் பிள்ளையாக அவரால் பெலப்படுத்தப்பட்டு , வழிநடத்தப்பட்டால் , நாம் சரீரத்தின்படி வாழாமல் ஆவியால் வழிநடத்தப்படுகிற பிள்ளைகளாய் இருப்போம்.

**லூக்கா 17 : 22-25**

**22 பின்பு அவர் சீஷர்களை நோக்கி: மனுஷகுமாரனுடைய நாட்களிலொன்றைக் காணவேண்டுமென்று நீங்கள் ஆசைப்படுங்காலம் வரும்; ஆனாலும் அதைக் காணமாட்டீர்கள்.**

**23 - இதோ, இங்கே என்றும், அதோ, அங்கே என்றும், சிலர் உங்களிடத்தில் சொல்லுவார்கள், நீங்களோ போகாமலும் பின்தொடராமலும் இருங்கள்.**

**24 - மின்னல் வானத்தின் ஒரு திசையில்தோன்றி மறுதிசைவரைக்கும் பிரகாசிக்கிறது போல மனுஷகுமாரனும் தம்முடைய நாளிலே தோன்றுவார்.**

**25 - அதற்கு முன்பு அவர் அநேகம் பாடுபட்டு, இந்தச் சந்ததியினால் ஆகாதவனென்று தள்ளப்படவேண்டியதாயிருக்கிறது.**

இவ்வசனத்தில் இயேசு சொல்கிறார் ,"என்னை காணவேண்டுமென்று தேடுவீர்கள். சிலர் அவர் அங்கே இருக்கிறார் இங்கே இருக்கிறார் என்று சொல்வார்கள். நீங்கள் அங்கும் இங்கும் ஓடிட வேண்டாம். ஏன் என்றால் நான் வரும் நாள் மின்னலை போல இருக்கும். அந்த நாளானது மிகவும் பிரகாசமாகவும் வெளியரங்கமாகவும் இருக்கும்.

தேவன் தீர்க்கதரிசனமாக சொல்கிறார் , அவர் ஒரு ஆவியாக செயல்படப்போகிறார் என்று. தேவனுடைய வல்லமையானது ஒரு மின்னலை போல செயல்படும். அது அசைவாடும் வல்லமை. எங்கும் நிறைந்து இருக்கும் வல்லமை. நாம் தேவனுடைய ராஜயத்திற்கு உட்பட்டவர்களாய்

இருக்கும்போது நாம் இயேசுவை போல நடந்து செயல்பட ஆரம்பிப்போம். நீங்கள் தேவ ஆவியினால் உணர்த்தப்பட்டு வழிநடத்த படுவீர்களானால், நீங்கள் எப்படி நடக்கவேண்டும் என்று அறிவீர்கள்.

நீங்கள் ஆவியால் வழிநடத்தப்பட்டால், ஒரு போர்டு ரூம்(boardroom) அல்லது ஒரு நேர்காணலுக்குள் நுழையும் பொழுதே, அங்கே அமர்ந்திருக்கும் நபர் நிறுவனத்தில் உங்களை காட்டிலும் மேலானவராக இருந்தாலும் நீங்கள் ஆவிக்குரிய சோர்வு , சவாலை உணர்ந்து , எல்லாவற்றிற்கும் மேலான ஆவியானவர் உங்களுடன் இருப்பதை அறிவீர்கள், நீங்கள் என்ன செய்ய வேண்டும் அல்லது பேச வேண்டும் என்று உங்களுக்குத் தெரியும். நீங்கள் ஆவியில் நிறைந்து பலமணிநேரம் ஜெபிக்கும் வீட்டுப்பாடத்தை செய்தால் நாம் எந்த நேரமும் தேவனுடைய பிள்ளையாக செயல்படுவோம்.

எந்தவொரு சூழ்நிலையையும் சவால்களையும் எதிர்கொள்ள ஆவிக்குரிய வகையில் நம்மை தயார்படுத்திக் கொள்ள வேண்டும். நாம் எந்த அறைக்குள் நுழைந்தாலும் அங்குள்ள நிலைமையை அல்லது அந்த நபரை அதிகாரத்துடன் எதிர்கொள்ள வேண்டும், இல்லையெனில் உங்கள் சொந்த இயலாமையை உணர்ந்து உங்களால் பேசவோ செயல்படவோ முடியாமல் போகும்.

**எபேசியர் 6:19,20**

**19. சுவிசேஷத்திற்காகச் சங்கிலியால் கட்டப்பட்டிருக்கிற ஸ்தானாபதியாகிய நான் அதைப்பற்றிப் பேசவேண்டியபடி தைரியமாய்ப் பேசத்தக்கதாக,**
**20. நான் தைரியமாய் என் வாயைத்திறந்து சுவிசேஷத்தின் இரகசியத்தை அறிவிக்கிறதற்கு வாக்கு எனக்கு கொடுக்கப்படும்படி எனக்காகவும் விண்ணப்பம்பண்ணுங்கள்.**

பவுல்,"எனக்காகவும் ஜெபம் செய்யுங்கள் நான் ராஜாக்களுக்கு முன்பாக நிற்கும் பொழுது நான் பேசவேண்டியவைகளை எனக்கு வெளிப்படுத்தும் படிக்கு " என்கிறார். பவுல் பல காரியங்களை எழுதியிருக்கிறார். அவருக்கு பேச தெரியாது என்று நினைக்கிறீர்களா? அவர் பிறப்பிலேயே பேச்சு திறன் வாய்ந்தவர். . ஆனால் தன் வாயிலிருந்து வார்த்தை வரும்படி ஜெபம் பண்ண சொல்கிறார். அவர் இங்கு இருக்கிற ஆவிக்குரிய அழுத்தத்தை பற்றி சொல்கிறார்.

உங்களுக்குத் தெரியுமா, பவுல் பிரசங்கித்து முடித்த போது ராஜா "நீ என்னை கிட்டத்தட்ட ஒரு கிறிஸ்தவனாக்குகிறாய்" என்றார். இதற்கு கரணம் அவருடைய ஜெபமும் அவருக்காக மக்கள் ஜெபித்த ஜெபமும். அவர் சுய ஞானத்தினால் இது நடக்கவில்லை. அது ஆவிக்குரியது.

ஆகவே, நீங்கள் ஜெபிக்க வேண்டும், எனக்காக ஜெபிக்க வேண்டும், தேவாலயத்திற்காக ஜெபிக்க வேண்டும், தேவனுடைய பிரசன்னத்தை எப்பொழுதும் சுமக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். மிக முக்கியமான விஷயம் எல்லாம் ஆவிக்குரியது. எல்லாவற்றையும் ஆவிக்குரிய ரீதியில் வெல்ல வேண்டும். தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறது, நீங்கள் அதைச் சுமக்கிறீர்கள்.

**லூக்கா:17 :28-35**

**26 நோவாவின் நாட்களில் நடந்ததுபோல மனுஷகுமாரனுடைய நாட்களிலும் நடக்கும்.**

**27 நோவா பேழைக்குள் பிரவேசித்த நாள்வரைக்கும் ஜனங்கள் புசித்துக் குடித்தார்கள், பெண்கொண்டு கொடுத்தார்கள்; ஜலப்பிரளயம் வந்து எல்லாரையும் அழித்துப்போட்டது.**

**28 லோத்தினுடைய நாட்களில் நடந்ததுபோலவும் நடக்கும்; ஜனங்கள் புசித்தார்கள், குடித்தார்கள், கொண்டார்கள், விற்றார்கள், நட்டார்கள், கட்டினார்கள்.**

**29 லோத்து சோதோமை விட்டுப் புறப்பட்ட நாளிலே வானத்திலிருந்து அக்கினியும் கந்தகமும் வருஷித்து, எல்லாரையும் அழித்துப்போட்டது.**

**30 மனுஷகுமாரன் வெளிப்படும் நாளிலும் அப்படியே நடக்கும்.**

**31 அந்த நாளிலே வீட்டின்மேலிருப்பவன் வீட்டிலுள்ள தன் பண்டங்களை எடுத்துக்கொண்டுபோக இறங்காமல் இருக்கக்கடவன்; அப்படியே வயலிலிருக்கிறவன் பின்னிட்டுத் திரும்பாமலும் இருக்கக்கடவன்.**

**32 லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங்கள்.**

**33 தன் ஜீவனை இரட்சிக்க வகைதேடுகிறவன் அதை இழந்து போவான்; இழந்துபோகிறவன் அதை உயிர்ப்பித்துக் கொள்ளுவான்.**

**34 அந்த இராத்திரியில் ஒரே படுக்கையில் படுத்திருக்கிற இரண்டுபேரில் ஒருவன் ஏற்றுக்கொள்ளப்படுவான், மற்றவன் கைவிடப்படுவான்.**

**35 திரிகை திரிக்கிற இரண்டு ஸ்திரீகளில் ஒருத்தி ஏற்றுக்கொள்ளப்படுவாள், மற்றவள் கைவிடப்படுவாள்.**

நோவாவிற்கு கர்த்தரை பற்றிய வெளிப்பாடு இருந்தது எனவே அவன் தேவன் கூறியபடி மழை வரும் என்று பிரசங்கித்தான். மக்கள் அவரை நம்பவில்லை ஏனேனில் அக்காலத்தில் மழை என்பது இல்லை. அதுவே லோத்தின் காலத்தில் பரலோகத்தில் இருந்து அக்கினி வரும் என்றபோது அவர் மனைவியும் மக்களும் அவரை நம்பவில்லை. அக்கினி வந்து அனைவரையும் அழித்தது.

எனவே இயேசு சொல்கிறார் "தன் ஜீவனை காப்பாற்ற போராடுகிறவன் அதை இழந்து போவான்". நாம் நோவாவின் காலத்தில் மக்கள் அவரை முட்டாளாக நினைத்தார்கள். அவர் இரவும் பகலும் பேழை செய்வதை பார்த்தும் அவர்கள் நோவாவை நம்பவில்லை. ஏற்றுக்கொள்ளவில்லை.

இயேசு சொல்கிறார் மனுஷகுமாரன் வரும் காலத்திலும் இப்படி தான் இருக்கும் என்று. கர்த்தரின் வல்ல கிரியைகளை இணையதளத்தில் பார்க்கிறோம் அதை உணர்கிறோம். இயேசு நமக்கு வெளிப்படுத்த பட்டாலும் பலநேரங்களில் நாம் பின்வாங்குகிறோம்.

நமக்கு இந்த உலகத்திற்குரிய ஆசீர்வாதம் அனைத்தும் வேண்டும். ஆனால், இவ்வாழ்கையை நாம் எவ்வாறு பார்க்கிறோம் "இயேசுவும் உலகமும் "நாம் சரியான முடிவுகளை எடுக்கிறோமா?" "நாம் தேவ ராஜ்யத்திற்கான காரியங்களை தேடுகிறோமா?" அல்லது " கர்த்தர் வல்லவர் அதனால் நம் வாழ்க்கையை நாம் மகிழ்ச்சியாய் செலவழிப்போம் " என்கிறோமா?

இயேசு சொல்கிறர்," என்னிமித்தம் தன் ஜீவனை நஷ்டப்படுத்துகிறவன் அதனை திரும்பவும் பெற்றுக்கொள்கிறான். அதை மீட்க நினைக்கிறவன் இழந்துபோகிறான்". எனவே நாம் எதை தேர்ந்து எடுப்போம் என்பது நம் கரத்தில் உள்ளது.நாம் சரீரத்திலும், ஆவிக்குரிய வகையிலும் நம்முடைய முடிவுகளின் விளைவாக இருக்கிறோம்.

இயேசு சொன்னார், "மனுஷகுமாரன் வரும் நாளிலும் நோவாவின் காலத்தை போலவும் லோத்துவின் காலத்தை போலவும் நடக்கும் ". மக்கள் பணம் சம்பாதிப்பதிலும், உலக சந்தோஷகளிலும், புகழ் அடைவதிலும் நேரத்தை செலவு செய்கிறார்கள். ஆனால் சபை, ஜெபம் என்று சொன்னால் அது அவர்களுக்கு கடைசிகாரியம். வாழ்வை இழப்பது என்பது நம்

ஆவிக்குரிய வாழ்க்கையையும் பெலத்தையும் இழப்பது . கஷ்டப்படும் நேரத்தில், எதிரியை எதிர்கொள்ளும் பொழுது நாம் ஜெபித்து சிறகடிக்க முயற்சிக்கிறோம் ஆனால் ஒரு கோழி போல பெலன் கூட நமக்கு இல்லை. நாம் எதை தெரிவு செய்கிறோமோ அதையே பெற்றுக்கொள்கிறோம்.

நான் ஆவிக்குரிய உலகத்தில் ஆளுகை செய்வதை பற்றி பேசுகிறேன். எந்த ஒரு அசுத்த ஆவியும் நமக்கு எதிராக இயங்க முடியாது. நீங்கள் எங்குசென்றாலும் நீங்கள் பெலப்படுத்தப்பட்டு ஆளுகை செய்யவேண்டும், ஆவியில் பெலவனாக இருக்க வேண்டும் . அப்பொழுது நாம் பயப்படமாட்டோம் நாம் குழம்பமாட்டோம் , பதட்டமும் பீதியும் அழுத்தமும் நம்மை தாக்காது. ஏன்எனில் நாம் ஒரு ஆவி . இயேசுவின் ஆவியால் நடத்தப்படுகிறோம்.!

# உங்கள் நாவின் அதிகாரம்

லூக்கா புத்தகத்தில் 11 ஆம் அதிகாரம் 20-26 வசனங்கள்,

**20. நான் தேவனுடைய விரலினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே.**
**21. ஆயுதந்தரித்த பலவான் தன் அரமனையைக் காக்கிறபோது, அவனுடையபொருள் பத்திரப்பட்டிருக்கும்.**
**22. அவனிலும் அதிக பலவான் வந்து, அவனை மேற்கொள்வானேயாகில், அவன் நம்பியிருந்த சகல ஆயுதவர்க்கத்தையும் பறித்துக்கொண்டு, அவனுடைய கொள்ளைப்பொருளைப் பங்கிடுவான்.**
**23. என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான், என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான்.**
**24. அசுத்த ஆவி ஒரு மனுஷனை விட்டுப்புறப்படும்போது, வறண்ட இடங்களில் அலைந்து, இளைப்பாறுதல் தேடியும் கண்டடையாமல்: நான் விட்டுவந்த என் வீட்டுக்குத் திரும்பிப்போவேன் என்றுசொல்லி,**
**25. அதில் வரும்போது, அது பெருக்கி ஜோடிக்கப்பட்டிருக்கக் கண்டு,**
**26. திரும்பிப்போய், தன்னிலும் பொல்லாத வேறு ஏழு ஆவிகளைக் கூட்டிக்கொண்டுவந்து, உட்புகுந்து, அங்கே குடியிருக்கும்; அப்பொழுது அந்த மனுஷனுடைய முன்னிலைமையிலும் அவன் பின்னிலைமை அதிக கேடுள்ளதாயிருக்கும் என்றார்.**

இங்கே, இயேசு ஒரு போர் பற்றி பேசுகிறார், ஒரு எதிரிப்படை வந்து தனது பிள்ளைகளையும், மக்களையும், தங்கள் சொந்த வீட்டையும், பாதுகாப்பான இடத்தையும் தாக்குகிறது. பின்னர் அவர் கூறுகையில், என்னுடன் இல்லாதவன், எனக்கு

விரோதியாயிருக்கிறான், என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான்.

நான் நடுநிலையாக இருப்பதால் நான் சிதறடிக்க பட மாட்டேன் என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் அது சாத்தியமில்லை; நீங்கள் பெறுவீர்கள் அல்லது இழப்பீர்கள். இது உலகின் இயல்பு, நீங்கள் மாறாமல் இருக்க முடியாது.

எனவே, நீங்கள் அப்படியே இருக்க முடியாது. ஒன்று நீங்கள் வல்லமையைப் பெறுகிறீர்கள் அல்லது இழக்கிறீர்கள். நீங்கள் தேவனுக்காக கூடிவரலாம் அல்லது சிதறடிக்கபடலாம், நீங்கள் இயேசுவோடு இருக்கலாம் அல்லது அவருக்கு எதிராக இருக்கலாம். நாம் தேவனுக்கு எதிராக இருக்க முடியும் என்பதைக் கேட்டு அதிர்ச்சியடையக்கூடும், ஆனால் அதை தான் இயேசு கூறுகிறார். நீங்கள் ஒரு தாக்கத்தை உருவாக்கவில்லை என்றால், உங்களுக்கு வழங்கப்பட்டதை இழக்கிறீர்கள். நீங்கள் தேவனுடைய ஆவியுடன் ஒத்துப்போகாதபோது, கண்டிப்பாக நீங்கள் மற்ற ஆவியுடன் தான் ஒத்துப்போகிறீர்கள்.

நீங்கள் இயேசுவின் ஆவியுடன் ஒத்துப்போகாதபோது என்ன நடக்கும்? நீங்கள் தேவனின் பிள்ளையாக இருக்கலாம்; நீங்கள் மறுபடியும் கிறிஸ்துவுக்குள் பிறந்து இருக்கலாம், நீங்கள் ஒரு விசுவாசியாக இருக்கலாம், ஆனால் அந்த நேரத்தில், நீங்கள் எந்த மனநிலையில் செயல்படுகிறீர்கள்! உங்கள் இதயம் கோபத்திலோ, எரிச்சலிலோ, கவலையிலோ அல்லது பதற்றத்திலோ செயல்பட்டால், நீங்கள் ஆவிக்குரிய ரீதியில் தாக்கப்படலாம், நீங்கள் சரியான ஆவியுடன் செயல்படாமல் இருக்கலாம். சரியான மனப்பான்மையுடன் செயல்பட நம்மை ஆவிக்குரிய ரீதியில் தயார்படுத்தவும், பலப்படுத்தவும் நாம் நேரம் எடுக்க வேண்டும்.

நீங்கள் சரியான ஆவியுடன் செயல்படவில்லை என்றால், எரிச்சல், கோபம், மனச்சோர்வு, பயம் மற்றும் குழப்பம் போன்ற தீய

ஆவியின் உணர்ச்சிகளுடன் செயல்படுகிறீர்கள் என்றால், நீங்கள் சபைக்கு வரும்போது நீங்கள் தேவனுடன் கூடிவருவதில்லை, ஒரு

நபராக நீங்கள் அந்த இடத்தில் சிதறிக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் சரியான அணுகுமுறையிலும் சரியான நடவடிக்கையிலும் செயல்படவில்லை என்றால், நீங்கள் சரியான ஆவியுடன் இணையவில்லை மற்றும் நீங்கள் தேவனோடும் இல்லை.

ஜெபிப்பதன் மூலம் நாம் நம்மை தயார்படுத்திக் கொள்ள வேண்டும் "ஆண்டவரே நான் உங்கள் பிரசன்னத்தில் செல்கிறேன், சரியான அணுகுமுறையை நான் கொண்டு செல்லட்டும்; சரியான மனப்பான்மையுடன் செயல்படட்டும். ஆமென்! " தேவனோடு இருக்க நான் உங்களை ஊக்குவிக்கிறேன். இயேசு கூறுகிறார், "என்னுடன் இல்லாதவர், எனக்கு விரோதியாயிருக்கிறான், என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான்."

***லூக்கா 11:24 கூறுகிறது***
***அசுத்த ஆவி ஒரு மனுஷனை விட்டுப்புறப்படும்போது, வறண்ட இடங்களில் அலைந்து, இளைப்பாறுதல் தேடியும் கண்டடையாமல்: நான் விட்டுவந்த என் வீட்டுக்குத் திரும்பிப்போவேன் என்றுசொல்லி,***

நீங்கள் ஆவிக்குரிய தாக்குதல்கள், கவலை, சோர்வு அல்லது குற்ற உணர்ச்சி அல்லது உங்களிடம் உள்ள எதையும் சபைக்கு கொண்டு வரலாம். நீங்கள் சபைக்கு வரும்போது, நீங்கள் விடுவிக்கப்படுவீர்கள், கர்த்தருடைய தொடுதலையும், அந்த ஆவி வெளியேறுகிறதையும் நீங்கள் உணரக்கூடும்.

சபையில் தேவனின் வல்லமை காரணமாக அந்த ஆவி உங்களை விட்டு விலகுகிறது. அந்த ஆவி இளைப்பாறுதளை தேடி, வறண்ட இடங்களில் அலைந்து, அதைக் கண்டடையாமல் நான் விட்டுவந்த என் வீட்டுக்குத் திரும்பிப்போவேன் என்றுசொல்லி, வீட்டுக்குத்

திரும்பி வரும்போது அது சுத்தமாக இருப்பதைக் கண்டு, திரும்பிப்போய், தன்னிலும் பொல்லாத வேறு ஏழு ஆவிகளைக் கூட்டிக்கொண்டுவந்து, உட்புகுந்து, அங்கே குடியிருக்கும். அதனால் அந்த நபரின் நிலை மோசமாகிவிடும்.

ஆவி நம்மை விட்டு வெளியேறினாலும், எப்போது நாம் இயேசுவின் ஆவிக்கு ஒத்துப்போகவில்லயோ, நம்மீது சாபத்தை உருவாக்குகிறோம். வேதாகமத்தில், நாம் எங்கு பார்த்தாலும், ஒரு ஆசீர்வாதம் அல்லது சாபம் இருக்கிறது, ஒரு வார்த்தை பேசப்படுகிறது. அது பேசப்படாவிட்டால், அந்த சாபம் நிறைவேறாது; அந்த ஆசீர்வாதம் நிறைவேறாது; அது ஒரு ஆவிக்குரிய விதத்தில் பேசப்பட வேண்டும்.

நம் வாழ்க்கையில் பிசாசு எவ்வாறு செயல்படுகிறது? நமக்குள் பிசாசின் வழியைப் பேசும் வரை பிசாசு நம் வாழ்க்கையில் செயல்பட முடியாது. நாம் நம் சொந்த சாபத்தை உருவாக்குகிறோம். எனது சாபத்தை நான் எங்கே உருவாக்கினேன் என்று நீங்கள் நினைக்கலாம்? என்னில் புற்றுநோயை உருவாக்க பிசாசை நான் எப்போது அழைத்தேன்? நீங்கள் அதை அறிந்திருக்க மாட்டீர்கள், ஆனால் தெரித்தோ அல்லது தெரியாமலோ நீண்ட காலத்திற்கு முன்பே நீங்கள் பேசியிருப்பீர்கள். உங்கள் பெற்றோர் உங்களைப் பற்றி பேசியிருக்கலாம் அல்லது நீங்கள் நம்பும் ஒருவர் உங்களைப் பற்றி பேசியிருக்கலாம். அல்லது பிசாசு உள்ளே வர நீங்கள் கதவுகளைத் திறந்திருக்கலாம்.

சிலர் வந்து தங்கள் வாழ்க்கை மற்றும் அனுபவங்களைப் பற்றி பகிர்ந்து கொள்ளும்போது, இந்த சாபம் அவர்களின் வாழ்க்கையில் எவ்வாறு வந்தது என்பதை என்னால் தெளிவாகக் காண முடிகிறது.10 முதல் 20 வருடங்களுக்கு முன்பு உள்ள வாழ்க்கையை பற்றி சொல்லும்போது, அவர்கள் தங்கள் வாயால் ஒப்புக்கொள்வார்கள், இதுதான் நான் பேசினேன், என் வாழ்க்கையை இப்படித்தான் கற்பனை செய்தேன் என்று.

***பிசாசு உங்கள் வாழ்க்கையில் நுழைய முடியாது; நீங்கள் கதவைத் திறந்து கொடுத்தாலே அன்றி பிசாசு உங்கள் வாழ்க்கையில் நுழைய முடியாது.***

***இது உண்மை மற்றும் மிகத் தெளிவானது; நீங்கள் தேவனின் பிள்ளையாக இருந்தால், தேவ பிரசன்னத்தால் வழிநடத்தப்பட்டால், பிசாசு உங்கள் வாழ்க்கையில் நுழைய முடியாது!***

நாம் எப்படி கதவைத் திறந்து கொடுக்கிறோம்? நாம் பல வழிகளில் பிசாசுக்கு கதவைத் திறக்கிறோம். பிசாசின் ஆயுதங்களில் ஒன்று பயம். பிசாசால் பயத்தின் சூழ்நிலைகளை உருவாக்க முடியும். நீங்கள் பயப்படும்போது, பிசாசு உங்கள் ஆத்துமாவுக்குள் நுழைய முடியும்.

நீங்கள் பாம்புகள் அல்லது இருள் அல்லது உயரங்கள் போன்றவற்றைப் பற்றி பயப்படுகிறீர்கள் என்றால், நீங்கள் அந்த பயத்தில் இயங்கிக் கொண்டிருக்கலாம், அந்த பயத்தை வெல்ல நீங்கள் ஒருபோதும் முயலவில்லை. பிசாசுக்கு மிகத் தெளிவாகத் தெரியும், " நான் உயரத்திற்கு பயப்படுகிறேன் "என்று மீண்டும் மீண்டும் நீங்கள் பேசிக் கொண்டிருப்பது. நீங்கள் எதைப் பேசினாலும் அது உங்கள் வாழ்க்கையில் நிலைநாட்டப்படுகிறது! எதிர்மறையாக எதுவும் பேச வேண்டாம்.

***தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்.***
***1பேதுரு 5: 8***

***சாபம் என்பது உங்கள் மீது எதிர்மறையாக(negative) பேசப்படும் ஒன்று; ஆசீர்வாதம் என்பது நேர்மறையாக(positive) பேசப்படும் ஒன்று.*** நீங்கள் எதிர்மறையாக பேசும்போது, உங்கள் வாழ்கைக்கு

சாபமாக பேசுகிறீர்கள். 'அது செயல்படும் என்று நான் நினைக்கவில்லை; அது வெற்றிகரமாக இருக்கும் என்று நான் நினைக்கவில்லை; அதைப் பெறுவேன் என்று நான் நினைக்கவில்லை; இதைப் பெறுவேன் என்று நான் நினைக்கவில்லை என்று சொல்லும்போது, பிசாசுக்கு சூழ்நிலைகளை உருவாக்கி கொடுக்கிறீர்கள்'. நீங்கள் பேசுகிறீர்கள், ஏனென்றால் நீங்கள் ஏற்கனவே அதில் நிரம்பியிருக்கிறீர்கள்.

நீங்கள் உங்கள் வாழ்க்கை, உங்கள் மனைவி, உங்கள் குழந்தைகள் மீது சாபத்தைப் பேசுகிறீர்கள், அதுதான் நடக்கிறது என்று நீங்கள் நினைக்கிறீர்கள். ஆத்மாவில் எதை பேசுகிறோமோ அதையே நாம் பெற்று கொள்கிறோம்! நாம் பேசுவது நம் வாழ்க்கையின் முதலீடு, ஆனால் பிசாசு சூழ்நிலைகளை உருவாக்குவான்.

நீங்கள் உங்கள் மனைவியுடன் சண்டையிட்டு "உன்னுடன் வாழ்வதன் மூலம் எனக்கு மாரடைப்பு ஏற்பட்டு இறந்துவிடுவேன்" என்று கூறும்போது, உண்மையில் நாளை காலை நீங்கள் இறக்க விரும்புகிறீர்களா? உங்கள் மனைவி மற்றும் மகள் மற்றவர்களின் பரிதாபத்திற்கு விட்டுவிட்டு? இல்லை, ஆனால் நீங்கள் அப்படி பேசும் விதத்தில் நிலைமை உருவாக்கப்படுகிறது. உங்கள் நாவால் உங்கள் வாழ்க்கையில் சாபத்தை உருவாக்குகிறீர்கள். நீங்கள் பலவீனமாக இல்லாவிட்டால் பிசாசு உங்களுக்குள் நுழைய முடியாது.

உங்களுக்கு ஒரு நேர்மறையான சொல் (positive word) வழங்கப்படும்போது, நீங்கள் அதைப் பெறுவீர்கள். ஆலயத்தில், நீங்கள் பிரசங்கத்தின் மூலம் வார்த்தையைப் பெறுகிறீர்கள். ஆலயம் முடிந்தவுடன், நீங்கள் வார்த்தையை மறந்துவிட்டு, எல்லோரையும் போல உங்கள் வாழ்க்கையை வாழ்கிறீர்கள். நீங்கள் வார்த்தையை கூட குறிப்பிடவில்லை. அந்த வார்த்தையைப் பற்றி நீங்கள் கடைசியாக நினைத்தது எப்போது?

அந்த வார்த்தையைப் பற்றி நீங்கள் கடைசியாக எப்போது தியானித்தீர்கள்? இல்லை, நீங்கள் அதை செய்ய வேண்டாம். பிரசங்கம் நன்றாக இருந்தது என்று நீங்கள் சொல்கிறீர்கள், ஆனால் எது நல்லது என்று உங்களுக்குத் தெரியாது; நீங்கள் அதை மறந்துவிட்டீர்கள், நீங்கள் எல்லோரையும் போல வாழ்கிறீர்கள். உங்கள் வார்த்தையிலும், உங்கள் அணுகுமுறையிலும், நீங்கள் விஷயங்களை எவ்வாறு பார்க்கிறீர்கள் என்ற கண்ணோட்டத்திலும் எந்த மாற்றமும் இல்லை.

ஒரு விதைப்பவரின் உவமையை இயேசு சொன்னார். ஒரு விதைப்பவராக, ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை காலையிலும் நான் விதைக்கிறேன், நீங்கள் அதைப் பெறுகிறீர்கள். 'வாவ்! எனக்கு ஒரு விதை கிடைத்தது, ஆம்! நான் அதைப் பெறுகிறேன்' என்று. நீங்கள் விதைகளைப் பெற்றிருப்பது நல்லது, ஆனால் உங்கள் இதயம் எப்படி இருக்கிறது? சிலருடைய இதயம் வறண்ட நிலத்தைப் போன்றது, அதில் பறவைகள் விதை எடுத்து செல்லும். சிலர் இதயம் முட்களில் இருப்பது போன்றது. ஆமாம், நான் அதைப் பெறுகிறேன், பின்னர் நீங்கள் வெளியே சென்று அதைப் பற்றி பேசுவீர்கள். முட்கள் அல்லது வேதனையான சூழ்நிலைகள் காரணமாக விதை வளர முடியாது.

இன்னும் சில விதைகள் பாறை மண்ணில் விழுந்ததைப் போல கடினமானது, விதை வளர்கிறது, ஆனால் அவை இடைவிடாத சிந்தனையும் தர்க்கமும் இருப்பதை உணர்கின்றன. எனவே உங்கள் சிந்தனை ஒரு திடமான பாறை போன்றது, சிறிய முளைப்பு ஏற்படலாம், ஆனால் பயனுள்ள எதுவும் இல்லை. மிகச் சில விதைகள் நல்ல மண்ணில் விழுந்து வளர்கின்றன. எனவே உங்கள் இதயம் மற்றும் உங்கள் இதயத்திலிருந்து வெளிவரும் சொற்களைப் பற்றி நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். அதை நினைவில் வைத்து பாதுகாக்கவும்.

வார்த்தை உங்கள் இதயத்தில் இருக்க வேண்டும்; நீங்கள் அதை தியானிக்க வேண்டும்; நீங்கள் அதை நினைவில்

வைத்திருக்க வேண்டும்; பரிசுத்த ஆவியானவர் அந்த வார்த்தையைச் செயல்படுத்த நீங்கள் அனுமதிக்க வேண்டும்; பின்னர் அந்த வார்த்தை உயிர்ப்பிக்கும். நீங்கள் பெற்ற தீர்க்கதரிசன வார்த்தை, உங்களை தூண்டிவிடவோ, உற்சாகப்படுத்தவோ அல்லது உங்களுக்குள் நெருப்பை உருவாக்கவோ செய்கிறது; அது உங்களில் வளர அனுமதிக்கப்பட வேண்டும். அதை 'பாதுகாத்து அனுபவிக்கவும்', உங்கள் உள்ளே நுழைந்தவற்றில் கவனமாக இருங்கள், இல்லையெனில் பறவைகள் வந்து அதை எடுத்துக்கொண்டு போய்விடும்.

வேறொரு வார்த்தைக்காக உலர்ந்த மற்றும் காலியாக நீங்கள் மற்றொரு நாள் திரும்பி வருகிறீர்கள்; எந்த வளர்ச்சியும் இல்லை; உங்கள் வார்த்தைகள் மாறவில்லை; உங்கள் அணுகுமுறை மாறவில்லை; நீங்கள் வாழ்க்கையைப் பார்க்கும் முறை மாறவில்லை; உங்கள் வாழ்க்கை மாறவில்லை; நீங்கள் அடுத்த நிலைக்கு செல்லவில்லை; நீங்கள் பல விஷயங்களை அறிந்திருந்தாலும், உங்கள் வாழ்க்கையில் எதுவும் மாறவில்லை, ஏனென்றால் அதை உங்களுடன் எடுத்துச் செல்ல நீங்கள் கவனமாக இல்லை

என்னுடன் இல்லாதவன், எனக்கு விரோதியாயிருக்கிறான், என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான்.

***"நீங்கள் என்னுடன் இல்லாதவன், எனக்கு விரோதியாயிருக்கிறான், என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான்." எனவே நீங்கள் கவனமாக இருந்தால், ஒன்றாக நாம் வளருவோம்!.***

நம் அழைப்பைப் பற்றியும் நாம் யார் என்பதையும் நாம் அறிந்திருக்க வேண்டும். வார்த்தைகள் மிகவும் வல்லமை வாய்ந்தவை; நீங்கள் வார்த்தையால் ஆசீர்வதிக்கப்படுவீர்கள்;

அபிஷேகம் வார்த்தையால் அதிகரிக்கிறது; மற்றும் தேவையற்ற வார்த்தையால் அபிஷேகம் குறைந்து கொண்டேப்போகிறது . மனிதன் பேசும் ஒவ்வொரு வார்த்தையையும் கணக்கிட வேண்டும் என்று பைபிள் சொல்கிறது. அதற்கு தேவன் ஒரு புத்தகத்தைத் திறந்து வார்த்தைகளை எண்ணப் போகிறார் என்று அர்த்தமல்ல. கணக்கு இங்கேயே இருக்கிறது, அது இங்கேயே நடக்கிறது, உங்கள் வாழ்க்கை நீங்கள் பேசும் ஒரு தயாரிப்பு.

***மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்புநாளிலே கணக்கொப்புவிக்கவேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். மத்தேயு 12:36***

அந்நியபாஷைகளில் ஜெபிப்பது ஆவியுடன் இணைவதற்கான ஒரு வழியாகும். நீங்கள் அந்நியபாஷைகளில் ஜெபிக்கவில்லை என்றால், நீங்கள் ஆவியுடன் இணையவில்லை. ஆவி உள்ளே இருந்தாலும், நீங்கள் ஆவியுடன் இணையவில்லை. நீங்கள் எவ்வாறு அந்நியபாஷைகளில் ஜெபிக்கிறீர்கள்? உங்கள் வாயால் நீங்கள் அந்நியபாஷைகளில் ஜெபிக்கிறீர்கள். உங்கள் சிந்தனையால் ஜெபிக்க முடியாது, ஏனென்றால் உங்கள் சிந்தனையை பரிசுத்த ஆவியுடன் இணைக்க முடியாது.

***அந்நியபாஷைகளில் ஜெபிப்பது ஆவியுடன் இணைவதற்கான ஒரு வழியாகும்.***

உங்கள் சிந்தனை பயனற்றது, அது உங்கள் வாய்; அது ஆவிக்குரிய வாய். அந்நியபாஷைகளில் ஜெபிப்பது தேவன் உருவாக்கிய ஒரு சேனல் 'ஆவிக்குரிய வாய்'. நீங்கள் அந்நியபாஷைகளில் பேசும்போது, அது ஆவியிலிருந்துதான் வருகிறது. நீங்கள் பேசாதபோது, ஆவியிலிருந்து வரும் வார்த்தை பேசப்படுவதில்லை. ஒருவேளை நீங்கள் பேசும் அதே வார்த்தையாக மீண்டும் மீண்டும் பேசலாம், அது ஒரே மாதிரியாக

இருக்கலாம், நீங்கள் ஆவியிலிருந்து பேசுவதைப் பொருட்படுத்தாது, உங்கள் மனம் புறக்கணிக்கப்படுகிறது.

***என்னத்தினாலெனில், நான் அந்நியபாஷையிலே விண்ணப்பம்பண்ணினால் என் ஆவி விண்ணப்பம்பண்ணுமேயன்றி, என் கருத்து பயனற்றதாயிருக்கும்.***
***1கொரிந்தியர் 14:14***

**மாறாக, நீங்கள் வாயால் ஜெபிக்காதபோது உங்கள் சிந்தனையில் ஏதாவது சிந்தித்து கொண்டு இருபீர்கள், நீங்களே உங்களை ஏமாற்றுகிறீர்கள், அந்த நேரத்தை வீணடிக்கிறீர்கள்.** ஆவிக்**குரிய வளர்ச்சிக்கு உங்கள் வாய் மற்றும் நாவின் உச்சரிப்பு மிகவும் முக்கியமானது என்பதால் நீங்கள் பேச வேண்டும், ஜெபிக்க வேண்டும்.**

ஆசீர்வாதமும் சாபமும் வாய் வழியாக வருகிறது. ஒருவரை சபிப்பதாக நீங்கள் நினைத்தால் அவர் சபிக்கப்படுவதில்லை. அதே மாதிரி , ஒருவரை ஆசீர்வதிப்பதாக நீங்கள் நினைத்தால் அவர் ஆசீர்வதிக்கப்படுவதில்லை. நீங்கள் அதை வெளியே பேச வேண்டும்

உங்கள் இருதயத்திற்காக நீங்கள் வெகுமதி பெறுவீர்கள் என்று பைபிள் சொல்லவில்லை. சொற்களுக்கும், செயல்களுக்கும் உங்களுக்கு வெகுமதி பெற்று தரும். நாம் என்ன பேசுகிறோம் என்று கவனமாக இருக்க வேண்டும். ஜீவனும் மரணமும் நம் நாவின் வல்லமையில் உள்ளன!

***மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும்; அதில் பிரியப்படுகிறவர்கள் அதின் கனியைப் புசிப்பார்கள். நீதிமொழிகள் 18:21***

"யாராவது வலிமையான ஒருவன் தாக்க செல்லும்போது அந்த மனிதன் நம்பியிருந்த கவசத்தை எடுத்துச் சென்று அவன் கொள்ளையடிப்பதைப் பிரிக்கிறான்". நீங்கள் கவசத்தால் உங்களைப் பாதுகாத்துக் கொள்கிறீர்கள். பிசாசு உங்கள் கேடயத்தை எடுத்துச் செல்கிறான்; உங்கள் கவசம், கேடயம்,

விசுவாசம் எடுத்துச் செல்லப்பட்டதும், அவர் உங்கள் கொள்ளையை பகிர்ந்து கொள்ள முடியும்.

அன்பான தேவனுடைய பிள்ளைளே, இயேசுவின் ஆவி உங்களிடத்தில் இருக்கிறது; இயேசுவின் ஆவியின் வல்லமை உங்களிடத்தில் இருக்கிறது . நாம் ஞானமாக இருக்க வேண்டும்; நாம் பேசுவதை நாம் அறிந்திருக்க வேண்டும். தேவன் உங்களுக்குள் என்ன கனவு வைத்திருக்கிறார்; தேவன் உங்களுக்குள் என்ன நோக்கம் வைத்திருக்கிறார்; அது இயேசுவின் வல்லமைமிக்க பெயரில் நிறைவேறும். அது எதுவாக இருந்தாலும் நீங்கள் அங்கு செல்வீர்கள்; அது எப்படி இருக்கும் என்பது முக்கியமல்ல; அது எப்படி உணர்கிறது என்பது முக்கியமல்ல; உங்கள் கேடயத்தை சரியான இடத்தில் வைத்திருக்கும் வரை நீங்கள் அங்கு செல்வீர்கள்.

நீங்கள் தேவனுடைய பிள்ளை. நீங்கள் பரிசுத்தமாக்கப்பட்டு பிரிக்கப்பட்டிருக்கிறீர்கள்; நீங்கள் பெற்றுக்கொள்வதை சொல்ல நீங்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். நீங்கள் அதைப் பற்றிக் கொள்ள வேண்டும், நீங்கள் அதைப் பற்றி தியானிக்க வேண்டும், அப்போது அதைப் பெறுவதற்கான வலிமை உங்களுக்கு இருக்கும்! உங்கள் விசுவாசம் அதிகரிக்கும் ஏனெனில் நீங்கள் பேசியதும் உங்கள் நோக்கமும் இணைக்கப்பட்டு இருக்கும்; அது இயேசுவின் வல்லமையுள்ள நாமத்தில் நிறைவேறும். ஆமென்!

# பில்லிசூனியத்தின் அதிகாரத்தை முறியடிப்பது எப்படி?

‘எலியா’ வலிமைமிக்க தேவ மனிதர். அவர் வானத்திலிருந்து நெருப்பைக் கொண்டுவந்ததால், தேவனின் மிகப்பெரிய வல்லமை வெளிப்பட்டது . ஒரே நாளில், அவர் தேசங்களை முழங்காலில் கொண்டுவந்தார், அவர்கள் தேவனை ஆராதனைச் செய்தார்கள். வேதாகமத்தில் எலியாவைப் பற்றிய அறிமுகம் இது போன்றது, “கீலேயாத்தில் குடிகளிலே திஸ்பியனாகிய எலியா. அவரது பரம்பரை குறிப்பிடப்படவில்லை. அவரை ஒரு தீர்க்கதரிசி என்று யாரும் அறிந்திருக்கவில்லை.

***"கீலேயாத்தின் குடிகளிலே திஸ்பியனாகிய எலியா ஆகாபை நோக்கி: என் வாக்கின்படியே அன்றி இந்த வருஷங்களிலே பனியும் மழையும் பெய்யாதிருக்கும் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான் அவருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்றான்."***
***1 இராஜாக்கள் 17 – 1***

ஆகாப் ராஜாவுக்கு பனியும் மழையும் பெய்யாதிருக்கும் என்று ஒரு பெரிய வறட்சியை எலியா அறிவிக்கிறார். எலியா, ‘நான் அதைப் பற்றி பேசும் வரை மழை பெய்யாது’ என்றார். எந்த மழையும், ஈரப்பதமும், பனியும் இருக்காது. அதாவது, அவருடைய வார்த்தையும், பின்னர் கர்த்தருடைய வார்த்தையும் எலியாவிடம் வரும் வரை அங்கு வறட்சியாய் இருக்கும். பின்பு கர்த்தருடைய வார்த்தை எலியாவுக்கு உண்டாகி: “ நீ இவ்விடத்தை விட்டுக் கீழ்த்திசையை நோக்கிப் போய், யோர்தானுக்கு நேராயிருக்கிற கேரீத் ஆற்றண்டையில் ஒளித்துக்கொண்டிரு" என்றார். யோர்தான் ஒரு நதி என்றாலும், தேவன் அவரை யோர்தானிலிருந்து நீரை குடிக்கச் சொல்லவில்லை, ஆனால் அவர் அவரிடம் ஆற்றண்டைக்கு செல்லச் சொன்னார். பின்னர் அவர் கூறியதாவது,

“உன்னைப் போஷிக்க, காகங்களுக்குக் கட்டளையிடுவேன் என்றார்". எலியா சென்று ஆற்றண்டையில் ஒளிந்துகொண்டார், தேவன் அவருக்கு காக்கைகளின் வழியாக உணவு அனுப்பிக் கொண்டிருந்தார்.

ஒரு வருடம் கடந்துவிட்டது, இரண்டு ஆண்டுகள் கடந்துவிட்டன, அவர் தனிமையில் இருந்தார். அவர் காகங்களுடன் அங்கு இருந்தார், வேறு சில விலங்குகளும் இருந்திருக்கலாம்.

***அறிக்கை செய்வோம் :*** அவர் தனிமையில் இருந்தார்.

காகம் உணவைக் கொண்டு வந்தது, எலியா அங்கே இருந்தார். அவர் அங்கு என்ன உணவு உட்கொண்டார் ? “ஒளிந்துகொள்” என்று தேவன் சொல்ல என்ன காரணம்? தேவனுடைய விருப்பம் என்ன?

தேவன் எலியாவிடம் சொன்னார் , என்னால் வானத்தை மூட முடியும், மழையை என்னால் தடுக்க முடியும், ஆனால் ஆகாப் ராஜாவிடம் இருந்து உன்னை காப்பாற்ற முடியாது. தேவன் அவரை ஒளிந்துகொள்ள சொன்னதற்குக் காரணம் இதுதானா? தேவனின் திட்டத்தின்படி அவர் ஒளிய வேண்டியிருப்பதால் அவரை ஒளிந்துகொள்ள தேவன் சொன்னார்.

அடுத்த அதிகாரத்தில், அவர் ஒபதியா என்ற மனிதரிடம் தன்னைக் காட்டினார்.

***1இராஜாக்கள் 18: 7-10***
***"ஒபதியா வழியில் போகும்போது, எலியா அவனுக்கு எதிர்ப்பட்டான்; அவன் இவனை இன்னான் என்று அறிந்து, முகங்குப்புற விழுந்து, நீர் என் ஆண்டவனாகிய எலியா அல்லவா என்று கேட்டதற்கு;அவன், நான்தான்; நீ போய், இதோ, எலியா வந்திருக்கிறான் என்று உன் ஆண்டவனுக்குச் சொல் என்றான்.அதற்கு அவன்: ஆகாப் என்னைக் கொன்றுபோடும்படிக்கு, நீர் உமது அடியானை***

***அவன் கையில் ஒப்புக்கொடுக்க நான் என்ன பாவம் செய்தேன்.உம்மைத் தேடும்படி என் ஆண்டவன் மனுஷரை அனுப்பாத ஜாதியும் ராஜ்யமும் இல்லை என்று உம்முடைய தேவனாகிய கர்த்தரின் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்;"***
***1இராஜாக்கள் 18: 7-10***

ஆகாப் எல்லா நபர்களையும் விசாரணை செய்துகொண்டு இருந்தான். அவன் வல்லமைமிக்கவன் என்பதாலும், எந்த மன்னர்களும் ஆகாப்புடன் வர விரும்பாததாலும் அவன் முழு தேசத்தையும் அழைத்து வந்திருந்தான். ஆகாப் எப்படி இவ்வளவு வல்லமைமிக்கவன் என்றால் அவனுடன் பல தீய ஆவிகளை வைத்து கொண்டிருந்தான். அவனது மனைவி யேசபேல் ஒரு சாதாரண சூனியக்காரி மட்டுமல்ல, அந்த நாட்களில் இருந்த பல தேவ மனிதர்களை விட வல்லமை பெற்றவள். எனவே, தேவ மனிதர்களும், தேசங்களும் தலைமறைவாக்கபட்டது. அவனது மனைவி ஒரு பெரிய சூனியக்காரி என்பதால் எல்லோரும் ஆகாப் மன்னனை வணங்கினார்கள். அவள் ஆவிகளின் உலகத்தை ஆட்சி செய்தாள்; ராஜா மற்றும் ராணிக்கு எதிராக யாரும் நிற்க முடியாது.

***"உம்மைத் தேடும்படி என் ஆண்டவன் மனுஷரை அனுப்பாத ஜாதியும் ராஜ்யமும் இல்லை என்று உம்முடைய தேவனாகிய கர்த்தரின் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்; நீர் இல்லையென்று அவர்கள் சொன்னபோது, அவன் அந்த ராஜ்யத்தையும் அந்த ஜாதியையும் உம்மைக் காணவில்லை என்று சத்தியம் வாங்கி கொண்டான்."***
***1 இராஜாக்கள் 18 –10***

இது மற்றொரு ஆவிக்குரிய பரிமாணம். ‘சத்தியம்’ என்ற சொல்லின் பொருள் என்ன? ஒருவர் பொய் சொன்னால், அவர்

இறந்துவிடுவார். அதனால்தான் தேவன் சத்தியம் செய்யாதீர்கள் என்று கூறுகிறார். சத்தியம் செய்வது சூனியம். ஆகாப் மன்னர் ஒவ்வொரு ராஜாவையும் பதவியேற்பு விழாவிற்குச் செல்லச் செய்தார்.ஆகாப் ராஜா வல்லமை வாய்ந்தவன்; அவன் தனது மனைவி யேசபேலின் மூலம் பக்கத்து நாடுகளையெல்லாம் ஆட்சி செய்தான். எலியாவை யாரும் கண்டுபிடிக்க முடியவில்லை. எலியா ஒரு மந்திரவாதி என்று எண்ணி அவரைப் பிடிக்க விரும்பினான், ஆகாப் ராஜா. அவர் தேவனை ஊமை, இறந்தவர் என்று நினைத்து கொண்டிருந்தான்.

அவன் யேசபேல்லை மணந்தபோது, அவள் அனைத்து வல்லமைகளும் வாய்ந்தவள் என்று அவன் கண்டான். அவளால் மந்திரம் செய்ய முடியும், எல்லா மன்னர்களையும் முழங்காலில் கொண்டு வர முடியும் என்று அறிந்து கொண்டான். அதனால் ராஜ்யம் அனைத்தும் செழித்தோங்கியது, ராஜா மகிழ்ச்சியாக இருந்தார். என் பெண், வல்லமைமிக்கவள், அவளால் பெரிய காரியங்களைச் செய்ய முடியும் என்பதால் யெகோவாவை ஏன் தேவனாக அழைக்க வேண்டும் என்று அவன் நினைத்தான். ஆகாப் ராஜா எலியாவைத் தேடினான். ஆனால், அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அவன் அதோடு நின்றிருப்பார் என்று நினைக்கிறீர்களா? எலியாவைத் தேடுவதற்காக எல்லா திசைகளிலும் யெசபெல் வழியாக எல்லா வகையான தீய ஆவிகளையும் அவன் அனுப்பியிருத்தான். ஆவிகளால் பறந்து கண்டுபிடிக்க முடியும்.

தேவன் எலியாவை ஒரு காரணத்திற்காக மறைய சொன்னார். எல்லா காரணங்களையும் நாம்மால் புரிந்து கொள்ளா முடியாமல் இருக்கலாம், ஆனால் எலியா ஆவிக்குரிய உலகில் ஒளிந்து கொள்ள வேண்டும் என்று அவர் விரும்பினார் என்பது நமக்கு தெரிகிறது, மேலும் அவர் ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒளிந்து கொள்ளும்படி எலியாவிடம் சொன்னார்; ஏனென்றால், அந்த இடம் தேவனால் உருவாக்கப்பட்டது; ஏனெனில், எந்த ஆவியும் அவரைத் தொட

முடியாது. ஆமென்! அதுதான் பாதுகாப்பான இடம், யாரும் நுழைய முடியாத இடம் .

அவர் அந்த ஆற்றுடன் இணைக்கப்பட்டிருக்கும் வரை, அவரை தொடமுடியாது. அந்த ஆறு தேவன் எலியாவை இணைத்த பலிபீடமாக இருந்தது. தேவன் சொல்லும் வரை அவர் இணைக்கப்பட வேண்டிய இடம் அதுதான்.

தேவன் இருக்கும்படி சொன்ன இடத்தின் மறைவின் கீழ் இருக்கிறார், அவரை தொடமுடியாது.

***அறிக்கை செய்வோம்: என்னை தொடமுடியாது; நான் மேற்கொள்ள பட முடியாதவன்***

நீங்கள் இந்த பலிபீடத்துடன் இணைக்கப்பட்டிருப்பது, உங்கள் நோக்கம் அல்லது விருப்பம் மட்டுமல்ல, உங்களை இங்கே இணைத்தது தேவன். நீங்கள் கேரீத் ஆற்றண்டையில் குடித்துவிட்டு, அந்த இடத்தில் வசிக்கும் வரை, எந்த பறக்கும் பிசாசும் உங்களைத் தொட முடியாது.

தேவன் நம்மை லாஞ்ச்பேட்டில்(Launchpad) வைக்கும் வரை ஒரு இடத்தில் வாழ அழைக்கப்பட்டிருக்கிறோம். எல்-பெத்தேல் என தேவன் நமக்கு, தன்னைக் காண்பிக்கும் வரை, அந்த இடத்திலேயே இருக்கவும், பலிபீடத்துடன் இணைந்திருக்கவும் அவர் சொன்னார். தேவனை மகிமைப்படுத்த நாம் பெலப்பட வேண்டும்.

எனவே, எல்லா வகையான ஆவிகள் மற்றும் சூனிய தந்திரங்களால் எலியாவைக் கண்டுபிடிக்க முடியவில்லை, ஏனெனில் அவர் எந்த இடத்தில் இருக்க வேண்டுமோ அங்கு இருந்தார். எந்த ஆவியும் அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆறு வறண்டு கொண்டிருந்தபோது, தேவன் எலியாவிடம், “ஆறு வறண்டுபோகிறது, ஆனால் யோர்தான் நதிக்குச் செல்ல வேண்டாம்" என்றார். நமது ஒவ்வொரு அடியும் தேவனால் நியமிக்கப்பட வேண்டும்.

***"நீ எழுந்து, சீதோனுக்கடுத்த சாறிபாத் ஊருக்குப் போய், அங்கே தங்கியிரு; உன்னைப் பராமரிக்கும்படி அங்கே இருக்கிற ஒரு விதவைக்குக் கட்டளையிட்டேன் என்றார்."***
***1 ராஜாக்கள் 17: 9***

***அறிக்கை செய்வோம்:***
***ஒவ்வொரு அடியும் கடவுளால் நியமிக்க பட வேண்டும். நான் ஒரு ஆவி, நான் அடுத்து எங்கு செல்வேன் என்று ஆவியில் அறிந்து கொள்ளுவேன்.***

நாம் எடுக்கும் அல்லது நகற்றும் ஒவ்வொரு அடியும் தேவனால் நியமிக்கப்பட வேண்டும், ஏனென்றால் நாம் ஆவிக்குரிய மனிதர்கள். பவுல் சொன்னார், 'நான் மாம்சத்திலோ இரத்தத்திலோ யோசனைபண்ணாமல், தேவன் அழைத்தபோது, நான் ஆவியால் நகர்ந்தேன்'. இது ஆவிக்குரியது. இன்றும், நாளையும் வெற்றிகரமான வாழ்க்கையை வாழ விரும்பினால், நீங்கள் ஆவிக்குரியவர்களாக இருக்க வேண்டும்.

எலியா நினைத்திருப்பார், இப்போது அந்தக் கரை வறண்டு கிடப்பதால், நான் யோர்தான் நதிக்குச் செல்லட்டும். யோர்தான் நதியில் ஏராளமான தண்ணீர் இருந்ததால் அவர் அதைச் செய்திருக்க முடியும். ஆனால் தேவன் சொன்னார், "இனி வன வாழ்க்கை இல்லை, இப்போது வீட்டு வாழ்க்கைக்கான நேரம்". கர்த்தருடைய வார்த்தை எலியாவுக்கு வந்து ஆற்றிலிருந்து வெளியே வர சொன்னார்.

தேவன் வழிநடத்துகையில், அவர் செல்ல விரும்பும் இடத்திற்குச் செல்லுவீர்கள். அவர் சொல்வதை நீங்கள் செய்ய வேண்டும். அவர் சொல்லும் வரை, நாம் இருக்கும் இடத்திலேயே காத்திருக்க வேண்டும்.

***அறிக்கை செய்வோம்:***
***என் தேவன் பேசுகிறார், அவர் வழிநடத்துகிறார்.***

எலியா ஏற்கனவே வல்லமை வாய்ந்தவராகவும், அபிஷேகம் செய்யப்பட்டவராகவும் இருந்தார். எலியா, 'ஆண்டவரே, நான் உங்கள் பெயரில் பலியிட்டவுடன், என் பலிபீடம் பலமானது, இப்போது நீங்கள் மீண்டும் இந்த காட்டில் இரண்டு வருடங்கள் காத்திருக்கச் சொல்கிறீர்களா? நான் தேவனுடைய ராஜ்யத்திற்காக வேலை செய்ய வந்தேன் ' என்று சொல்லியிருக்க முடியும்.

ஆனால் தேவன் தம்முடைய திட்டத்தை எலியாவுக்கு அறிவுறுத்தினார். எலியா சாறிபாத்துக்குச் சென்றார். அவர் அந்த பெண்ணின் வீட்டில் வசித்து வந்தார், ஆனால் கிராமத்தில் யாருக்கும் இது பற்றி தெரியாது. இல்லையென்றால் அவர்கள் ஆகாப் ராஜாவுக்குத் தெரிவித்திருப்பார்கள். ஏனென்றால் எல்லா பக்கத்து நாடுகளும் அவருடைய கட்டுப்பாட்டில் இருந்தன. தேவனின் அறிவுறுத்தலின் படி நீங்கள் நகரும்போது, எந்த பறக்கும் பிசாசும் உங்களை கண்டுபிடிக்க முடியாது.

***தேவனின் அறிவுறுத்தலின் படி நீங்கள் நடக்கும்போது, எந்த பிசாசும் உங்களை கண்டுபிடிக்க முடியாது.***

***அறிக்கை செய்வோம்:***
***அவர்கள் என்னைக் கண்டுபிடிக்க மாட்டார்கள். நான் அபிஷேகத்தின் கீழ் இருக்கும் வரை, கர்த்தரின் வழியில் நடப்பேன்.***

தேவனின் நடத்துதல் மிகவும் முக்கியமானது. எலியா இரண்டு வருடங்கள் வசதியாக இருந்த இடத்தை விட்டு வெளியேறி, சாறிபாத்துக்கு நடந்து செல்லும்படி தேவன் சொன்னார். யேசபேல்லால் எலியாவை அவளது மந்திரக் கண்ணாடியில் பார்த்து கண்டுபிடிக்க முடியவில்லை.

***"உங்களுக்கு எதிராக செய்யப்பட்ட ஒவ்வொரு பலிபீடமும் இயேசுவின் வலிமையான நாமத்தில் அழிக்கப்படும்".***

***நீங்கள் தேவனை நம்பி, அவர் காட்டும் வழியில் நடக்கும்போது வல்லமை இருக்கிறது. நீங்கள் இருக்க வேண்டும் என்று தேவன் விரும்பிய இடத்தில் இருக்கும் போது, யாரும் உங்களைத் தொட முடியாது. ஆமென்!***

***அறிக்கை செய்வோம்:***
***என்னை யாரும் தொட முடியாது.***

எலியா தன் கோட்டையை விட்டு வெளியேறி, தேவன் அவரை வழிநடத்திய இடத்திற்குச் சென்றார். அந்த விதவை பெண்மணி தனது சொந்த கதையை வைத்திருந்தாள், ஆனால் 'எனக்கு முதலில் கொடுங்கள்' என்று கேட்கும் தைரியம் எலியாவுக்கு இருந்தது, அவள் அவருக்குக் கொடுத்தாள், பின்னர் அதிசயம் நடந்தது. காக்கைகள் அவரை வழிநடத்தியது, அன்றிலிருந்து தேவன் எலியாவிடம், "இப்போது உன்னை ஆகாபுக்குக் காட்டு. "உயிர்பிக்கப்படும் சமயம் " என்றார்.

***அறிக்கை செய்வோம்:***
***உயிர்பிக்கப்படும் சமயம்***

கர்த்தர் எலியாவிடம், " நீ போய் ஆகாபுக்கு உன்னைக் காண்பி" என்றார். எனவே, எலியா சென்று ஒபதியாவிடம் சொன்னார். ஒபதியா ஆகாபைச் சந்தித்து அவரிடம் சொன்னார், பின்னர் ஆகாப் ராஜா எலியாவைச் சந்தித்தார்.

***"அநேகநாள் சென்று, மூன்றாம் வருஷமாகையில், கர்த்தருடைய வார்த்தை எலியாவுக்கு உண்டாகி: நீ போய் ஆகாபுக்கு உன்னைக் காண்பி; நான் தேசத்தின்மேல் மழையைக் கட்டளையிடுவேன் என்றார்..."***
***1 இராஜாக்கள் 18: 1***

எலியா ஒரு தேவ மனிதர், வல்லமையான தீர்க்கதரிசி என்று எப்போதும் சொல்கிறோம்; ஆனால், அதற்கு பின்னால், புரிந்து

கொள்ள நிறைய விஷயங்கள் உள்ளன. நீங்கள் தேவனை மகிமைப்படுத்த விரும்பினால், தேவன் சொல்வதைக் கேளுங்கள். அவர் விரும்பும் வழியில் நடந்து செல்லுங்கள். மிகவும் கவனமாக இருங்கள், அது மிகவும் முக்கியமானது. நம் ஆத்துமா விரும்புகிறது போல வாழ அழைக்கப்படவில்லை. ஆத்மாவிலும், மாம்சத்திலும் வாழ நாம் அழைக்கப்படவில்லை, ஆனால் ஆவியோடு வாழ அழைக்கப்பட்டிருகிறோம். நாம் ஆவியுடன் வாழ்ந்தால் வெற்றியிலும், அதிகாரத்திலும் வாழ்வோம்.

நம் ஆத்மா பல ஆண்டுகளாக மாம்சத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது, அது மாம்சத்தை நோக்கி செல்லும். இந்த உலகம் மிகவும் அழகாக இருக்கிறதென்று அது நினைக்கும். அது நம்மை ஏமாற்றும். ஆனால் நான் உங்களுக்கு சொல்கிறேன், ஆவியுடன் வாழத் தொடங்குங்கள்.

***அறிக்கை செய்வோம்:***
***நான் ஆவியுடன் வாழத் தொடங்குவேன். நான் ஒரு ஆவிக்குரிய மனிதனாக வாழ்வேன். நான் ஆவிக்குரியவன்.***

தேவனின் ஆவியால் ஆத்மா, உணர்ச்சி, தர்க்கரீதியான மனம் மற்றும் மாம்சத்தை நாம் வெல்லும்போது, தேவனின் வழிநடத்துதலுக்காகக் காத்திருக்கும்போது, பிசாசு இல்லை, எந்த பேய் ஆவியும் உங்களை தொட முடியாது. நீங்கள் வெல்லமுடியாதகள் மற்றும் கண்ணுக்கு தெரியாதவர்கள்.

***அறிக்கை செய்வோம்:***
***நான் கண்ணுக்கு தெரியாதவன். எந்த பிசாசும் என்னைத் தொட முடியாது.***

"எலியா தன்னை ஆகாபிற்குக் காட்டுகிறான்" என்ற வார்த்தை எனக்கு பிடிக்கும். எலியா தன்னை காட்டும் வரை, ஆகாபால்

அவரைப் பார்க்க முடியவில்லை. ஒவ்வொரு வார்த்தைக்கும் ஒரு அர்த்தம் இருப்பதால் நான் தேவனுடைய வார்த்தையை விரும்புகிறேன். ஆமென்! அவர் ஆகாபிற்கு தன்னைக் காட்டியபோது, அவர் ஒரு சவாலை அழைத்தார். அவர் ஒரு கூட்டத்திற்கு அழைப்பு விடுத்தார், அவர் நெருப்பைக் கொண்டுவந்தார்.

# உயிர்ப்பிக்கும் சாட்சிகள்

**<u>சகோதரி.நேஹா தீபக்</u>**

**2 தீமோத்தேயு 1: 7 "தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல் பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்.**



எல்லா விதமான ஆன்மீக சடங்குகள் மற்றும் மந்திர தந்திரங்களும் என்னால் சாமியார்கள் மூலம் நடத்தப்பட்டன. அது என்னிலும் என் வாழ்க்கையிலும் பயத்தையும் இருளையும் உருவாக்கியது. எனக்கு 14 வயதாகும்போது நான் இயேசு கிறிஸ்துவை கொடுத்திருக்கிறார்".

ஒரு கிறிஸ்தவமல்லாத குடும்பத்தில் பிறந்து வளர்ந்த நான், 13 வயதில் நான் என் தாயை இழந்து இருள் சூழ்ந்த தனிமையில் வாழ்ந்தேன். யாருக்கும் சுமையாக இருக்க கூடாது என்பது மட்டுமே என் மனதில் எப்போதும் இருந்தது. எப்படியோ பள்ளிக்கு மட்டும் சென்று வந்தேன்.

என் தாயை மரண படுக்கையிலிருந்து காப்பாற்றுவதற்காக என் மீட்பராகப் ஏற்றுக் கொண்டு உடனடியாக ஒரு பெந்தேகோஸ்தே தேவாலயத்தில் ஞானஸ்நானம் பெற்றேன் 10 ஆண்டுகளாக ஒரு ஏ.ஜி. சபையுடன் இணைக்கப்பட்டிருந்தேன், ஆனால் ஒரு தாயான பிறகு படிப்படியாக சபையிலிருந்து விலகி சூழ்நிலைகள் மற்றும் பிரச்சனைகளின் அடிப்படையில் வாழத் தொடங்கினேன்.

பிப்ரவரி 2018 இல் நான் வேலையை இழந்ததால், அது எனக்கு மட்டும் ஏன் நேர்ந்தது என்று நினைத்து பயம் மற்றும் குழப்பத்தின் நாட்களில் இருந்தேன். வேலையை இழப்பதற்கான காரணம் உள் நிர்வாகத்தால் குறிப்பிடப்படாததால் நான் மிகவும் உடைந்து போனேன்.

தற்போதுள்ள மாணவர்கள் ஆர்வத்தை தூண்டும்படியாகவும் தங்கள் கல்வியில் கவனம் செலுத்த ஊக்குவிக்கப்படும் படியான, கல்வியில் சமீபத்திய கற்பித்தல் நுட்பங்களை செயல்படுத்தி எதிர்பாராத வேகத்தில் என் வேலையில் வளர்ந்து வருவதால், நிர்வாகத்தில் மூத்தவர்களும், சூப்பர் சீனியர்களும் அதை விரும்பவில்லை.

எனது பணி நீக்கக் கடிதத்தை நான் பெற்ற நாள், என் மனதில் வந்தது 2 தீமோத்தேயு 1: 7. என் வாழ்க்கையில் சில விஷயங்கள் சரியாக நடக்க வில்லை என்று தெரிந்ததும் ஒரு கிறிஸ்தவம் அல்லாத குடும்பத்தில் பிறந்ததால், "கடவுள் என்று யாராவது இருக்கிறார்களா?, நான் காது கேளாத மற்றும் குருடான ஒரு கடவுளை வணங்குகிறேனோ?" என்று நம்ப தொடங்கினேன்.

கடந்த சில ஆண்டுகளில் ஒரு குடும்பமாக நாங்கள் எந்த சபையுடனும் இணைக்கப்படவில்லை. குடும்பத்தில் பல பிரச்சினைகள் காரணமாக எங்கள் குடும்பம் மற்றும் தனிப்பட்ட வாழ்க்கை உணர்ச்சிகள், சூழ்நிலைகள் மற்றும் உடல் வலிமையில் பாதிக்கப்படுவதற்கு வழிவகுத்தது, அது முற்றிலும் புரிந்து கொள்ள முடியாத கடினமான வாழ்க்கை.

தேவனின் வார்த்தையிலிருந்து எனக்கு கிடைத்த நம்பிக்கை வாக்குறுதிகள் எனக்குள் தூங்கிக்கொண்டு இருந்தது நான் அதை எழுப்பக் கவலைப்படவில்லை. அந்த கடினமான நாட்களில், நிறுவனத்திலிருந்து பணி நீக்கக் கடிதம் எனக்குக் கிடைத்ததினால் அது என்னை துண்டு துண்டாக உடைத்தது. மேலும் எனக்குள் இருக்கும் பயம் அதிகமாகி என்னுடைய வாழ்க்கை முற்றிலும் தோல்வி அடைத்தது என்று நிதானிக்க தொடங்கினேன்.

ஆனால் உண்மையுள்ள என் பிதாவோ என்னை ஒருபோதும் அவரிடமிருந்து விலக்கவில்லை, பரிசுத்த ஆவியானவர் என் கணவரை (தீபக்) எலக்ட்ரானிக் சிட்டி யில் ஒரு சபையைத் தேட ஊக்கப்படுத்தினார். ஏப்ரல் 2018 அந்த சனிக்கிழமை இரவு என் கணவர் தூங்காமல், தொடர்ந்து ஒரு ஏஜி சபையைத் தேடிக்கொண்டிருந்தார். ஒரு குடும்பமாக நாங்கள் எப்படியும்

ஞாயிற்றுக்கிழமை தேவனுடைய ஆலயத்திற்குச் செல்வோம் என்று முடிவு செய்தோம், ஆனால் எந்த ஏஜி சபை என்று இன்னும் குழப்பமாக இருந்தது. தீபக் எடர்னல் லைட் ஏஜி சபையைக் கண்டு பிடித்தபோது, நாங்கள் ஆங்கில ஆராதனையில் கலந்துகொண்டோம். நான் சபைக்கு வரும்போதே என் தந்தையின் வீட்டிற்குள் வருவதைப் போன்று உணர்ந்தேன். என் பயத்தை நான் வெளிப்படுத்தாமல் ஏற்கனவே என் பயத்தை தேவன் போக்க தொண்டங்கினார் என்று இதயத்தில் அறிந்தேன்.

**விடுதலை:**

ஒவ்வொரு புதன்கிழமை மற்றும் சனிக்கிழமையும் குடும்பமாக நாங்கள் சுகமளித்தல், அபிஷேகம் மற்றும் பைபிள் படிப்பு வகுப்புகளில் கலந்துகொள்கிறோம். அதிக எடை காரணமாக நான் ஏராளமான உடல்நலப் பிரச்சினைகளைக் (முதுகுவலி, தைராய்டு மற்றும் முழங்கால் மற்றும் உடல் வலி) கொண்டிருந்தேன், இதன் காரணமாக நான் எனது வழக்கமான பணிகளில் ஈடுபடமுடியாமல், என் 5 வயது மகனை கவனித்துக் கொள்ள முடியவில்லை. உணவுக் கட்டுப்பாடு மற்றும் உடற்பயிற்சி செய்தாலும், ஒவ்வொரு நாளும் வலியோடு பலவீனமாகவும் சோர்வாகவும் இருந்தேன். ஜிம்மிங்கின் போது நான் கூடுதல் நேரத்தையும் முயற்சியையும் எடுத்துக்கொண்டேன், ஆனால் எந்தவொரு எடையும் குறைக்க முடியவில்லை.

28 நவம்பர் 2018 அன்று, ஒரு புதன்கிழமை சபையிலிருந்து நான் தீர்க்கதரிசனத்தைப் பின்பற்றுபவர்களுக்கு மத்தியில் தேர்வு செய்யப்பட்டேன், போதகர் ஆஸ்வின் “நான் என் கணவரை விட மெலிந்து போவேன்”, என்று எனக்கு ஒரு தீர்க்கதரிசனம் உரைத்தார். என் இதயத்தில் எந்த அவநம்பிக்கையையும் தாண்டி நான் அதைப் பெற்றுக்கொண்டேன். நான் அதை வாய் விட்டுக்கூறி அதன்படி அதை நம்பி வாழத்தொடங்கினேன். சாதாரண

ஆரோக்கியமான வாழ்க்கை முறையுடன் 11 மாதங்களில் நான் 20 கிலோகிராம் குறைத்தேன்.

இப்போது நாங்கள் ELAG உடன் இணைக்கப்பட்டு ஒரு வருடம் மற்றும் சில மாதங்கள் ஆகிவிட்டது. இங்கு சர்வவல்லவரின் அனுகூலமற்ற தயவு, தனித்தனியாக ஆன்மீக ரீதியாகவும் குடும்பங்களிலும் நம்மீது பொழிந்து கொண்டிருக்கிறது. எங்கள் நிதிப் போராட்டங்கள், ஆவிக்குரிய வளர்ச்சி, பெலன், வாழ்க்கை முறை மற்றும் மிக முக்கியமாக ஆவியுடன் தொடர்ந்து இணைந்திருப்பது ஆகியவற்றில் நம்பமுடியாத முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

பாஸ்டர் ஆஸ்வின் ஜேம்ஸ்டட் உடன் நெருக்கமாக பணியாற்றி வரும் பரலோகத்திலுள்ள என் பிதாவிற்கு நான் மிகவும் நன்றி கூறுகிறேன். நம்முடைய ஆவிக்குரிய தந்தையாக நம்மை நம் பாஸ்டர் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளரவும் வழிநடத்துகிறார், தேவனுடைய ராஜ்யத்தில் விதைக்கவும், தேவனுடைய ராஜ்யத்தை கனப்படுத்துவதற்காகவும் நம் பாஸ்டரோடு இனைந்து செயல்படும் என் பிதாவிற்கு நான் மிகவும் நன்றி கூறுகிறேன்.

பைபிள் படிப்பது மற்றும் அந்நியபாஷைகளில் பேசுவது குறிப்பிடப்படாத நிலைமைகளுக்கு அப்பாற்பட்ட பயம், குழப்பம், சுய பரிதாபம், மனச்சோர்வு மற்றும் வாழ்க்கையில் வாதங்கள் ஆகியவற்றின் பிணைப்பை முற்றிலும் உடைத்துவிட்டது.

தேவனுடைய பிள்ளைகளின் மேல் அவருடைய அபிஷேகம் மற்றும் தயவுசெய்தல் ஆகியவை நிபந்தனையற்றவை. சர்வவல்லமையுள்ள பிதாவுக்கு துதி கண மகிமை உண்டாவதாக.

**சகோதரர் .தீபக் மிதுன்**

துணை மேலாளர்- (வாடிக்கையாளர் சேவை) ஆக பணியாற்றுகிறார்
ஃபானுக் இந்தியா பிரைவேட் லிமிடெட், இ-சிட்டி, பெங்களூர்

இது ஏப்ரல் 18 அன்று ELAG சபையில் ஒரு குடும்பமாக இணைந்தோம். நான் 25 ஆண்டுகளாக சி.எஸ்.ஐ சபையில் இருந்தேன். பின்னர் ஒரு பெந்தேகோஸ்தே ஏ.ஜி. சபையில் ஞானஸ்நானம் பெற்று இயேசுவை என் சொந்த ரட்சகராக ஏற்றுக் கொண்டேன். தேவனைத் தேடுவது குழந்தை பருவத்திலிருந்தே எனக்கு வழக்கமாக இருந்தது. அது என் வாழ்க்கையில் ஒருபோதும் முடிவடையவில்லை. நான் ஆராதனையில் கலந்துகொண்டு, ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெறும் ஆசை எப்போதும் இருந்தது. வெவ்வேறு காரணங்களால் நான் சில ஆண்டுகளாக சபைக்குச் செல்லவில்லை. ஒருமுறை ஒரு தேவாலயத்திற்கு செல்ல விரும்புகிறேன் என்று தேவனிடம் ஜெபிக்க ஆரம்பித்தேன், பாரம்பரியமாக மற்றும் மறுபிறப்படைத்த கிறிஸ்தவனாக இருப்பதற்காக மட்டும் அல்ல, நான் என் ஆசை நிறைவேற,
சத்தியம் மற்றும் ஆவியின் வழியில் முன்னேற பிரத்தியேகமாக என்னை வழிநடத்த ஜெபித்தேன்,

என் இதயத்தில் ஒரு உறுதியுடன் சனிக்கிழமை இரவில் அருகிலுள்ள தேவாலயங்களை கூகிள் செய்யத் தொடங்கினேன். பல வலைத்தளங்களை கவனமாகப் பார்த்தேன். எடர்னல் ஏஜி இணையதளத்தில் ஒரு பார்வை, அவசரமாக என் பார்வையை ஈர்த்தது, இந்த சபையின் போதகர் பிரசங்க பீடத்திலிருந்து தேவனை வணங்குகிறார். அது எனக்குள் அமைதியையும், என்னை அங்கே இழுத்துச் செல்வதையும் உணர்ந்தேன். நான் தேடும் இடம் இது என்று நான் நம்பினேன். அடுத்த நாள் நாங்கள் ஆங்கில ஆராதனையில் கலந்துகொண்டோம்.

இன்று ஒரு வருடம் மற்றும் சில மாதங்களுக்குப் பிறகும் நாங்கள் பின்னிட்டுப் பார்த்ததில்லை என்று அறிவிக்கிறேன்.

நாங்கள் முன்பு அனுபவித்ததை விட உயர்ந்த அளவிலான ஆவியில் இணைக்கப்பட்ட வாழ்க்கையை நடத்தி வருகிறோம். இன்று எங்கள் வாழ்க்கை மாற்றப்பட்டுள்ளது.

மேலும், ஞாயிற்றுக்கிழமை ஆராதனை மற்றும் மிட்வீக்/ சனிக்கிழமை பிரார்த்தனை எங்கள் வாழ்க்கையை மாற்றிவிட்டன. ஒவ்வொரு முறையும் நாம் இந்த அபிஷேகத்தின் கீழ் வரும்போது, புதிய ஒன்றைப் பெறுகிறோம். குறிப்பாக கடந்த ஒன்றரை ஆண்டுகளில். 30 ஆண்டுகளில் இருந்த, பல அடிமைத்தனங்கள் மற்றும் அடக்குமுறைகளிலிருந்து நான் விடுவிக்கப்பட்டேன். எங்கள் வாழ்வில் விடுதலையையும் மகிழ்ச்சியையும் அனுபவிக்கிறோம். எங்களது புது வீடு வாங்கும் போது பரிசுத்த ஆவியின் அபிஷேகம், அந்நிய பாஷை, பொருளாதார முன்னேற்றம் ஆகியவற்றைப் பெற்றேன்.

தேவனால் அபிஷேகம் பெற்ற தேவமனிதர் தீர்க்கதரிசி ஆஸ்வின் ஜேம்ஸ்டட் மூலம், ஜெபிப்பது எப்படி, ஆவியில் அதிகாரம் பெறுவது, ஆவிக்குரிய உலகில் எப்படி நடப்பது, பல ஆவிக்குரிய விஷயங்களின் உண்மையான நுண்ணறிவு, மாம்சத்தையும் ஆத்துமாவையும் ஆவியுடன் ஜெயிப்பது மற்றும் முக்கியமாக எப்படி தேவனோடு இணைந்திருப்பது என்ற பல விஷயங்களைக் கற்றுக்கொண்டோம்.

பல மாதங்களாக, அவருடைய பிரசங்கத்தின் மூலம் நாம் பல விஷயங்களைக் கற்றுக் கொண்டு அதை வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தும்போது ஆசீர்வாதத்தைக் காண்கிறோம். தீர்க்கதரிசி இஸ்ரேல் பார்டிங்டனின் அபிஷேக ஆராதனைகளில் ஒரு பகுதியாக இருக்க எங்களுக்கு ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட வாய்ப்பு கிடைத்தது, மேலும் எங்கள் ஆவிகளில் நாங்கள் அதிகம் பெற்றுக்கொண்டோம்.

இந்த சேனையின் ஒரு பகுதியாக இருப்பதால் நாங்கள் பாக்கியவான்கள். இந்த அபிஷேகத்தின் கீழ் ஆவிக்குரிய உலகில் பறக்க பல மைல்கள் உள்ளன. கர்த்தரின் அன்பை அறிவிக்க எங்கள் வாழ்வில் இன்னும் பல சாட்சியங்கள் உள்ளன.

நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிற தேவனுக்கு மகிமை உண்டாவதாக.

எங்கள் ஆவிக்குரிய பயணத்தில் எப்போதும் எங்களுடன் இருப்பதற்கும், எங்கள் அழைப்பை நோக்கி நடக்க எங்களுக்கு வழிநடத்துகிற எங்கள் அன்பான பாஸ்டர் ஆஸ்வின் அவர்களுக்கு நன்றி. என்னைப் பற்றிய அவருடைய தீர்க்கதரிசனங்கள் நிறைவேறும் என்று நான் நம்புகிறேன்.

**விடுதலை மற்றும் சுகமளித்தல்:**

உங்களில் பலருக்கு எனக்கு சில உடல்நலப் பிரச்சினைகள் இருந்தன என தெரியும், கடந்த சில மாதங்களாக நான் அதனுடன் போராடிக் கொண்டிருந்தேன், அது அனைத்தும் மார்ச் மாதத்தில் தொடங்கியது, எங்கள் தேவாலயத்தில் 40 நாட்கள் உபவாசம் தொடங்கியது. நான் உபவாசத்தைத் தொடங்கினேன், ஆனால் என் உடலில் உள்ள பிரச்சினை, இதற்கு முன்னர் அறிகுறிகள் இருந்தபோதிலும், அது வழக்கமானதல்ல. ஆனால் அந்த நேரத்தில் அது மிகவும் கடுமையானதாகவும் வழக்கமானதாகவும் மாறியது. என் செரிமானத்தில் நான் சில சிக்கல்களை எதிர்கொண்டேன், இதன் காரணமாக என் உடலில் உருவான சில புண்களால் பாதிக்கப்பட்டேன். மூலக்ககாரணம் தெரியவில்லை. பல மாதங்களாக நான் கடுமையான வலியில் இருந்தேன், ஒவ்வொரு நாளும் நான் நாள் முழுவதும் வலியால் இருப்பேன், என்னால் ஒன்றும் செய்ய முடியாது, நான் படுக்கையில் படுத்துக் கொண்டிருப்பேன், அறிகுறிகளுக்கான சிகிச்சை அளித்தாலும் கிட்டத்தட்ட 8 மருத்துவர்களை நான் கலந்தாலோசித்தேன், ஆனால் இன்று வரை அது ஏன் ஏற்பட்டது என்று, பிரச்சினைக்கு மூலக்காரணம் கண்டுபிடிக்க முடியவில்லை.

என் உடலில் கிட்டத்தட்ட 15 கிலோகிராம் எடை குறைந்தது.ஒன்றரை மாதங்களாக நான் சிகிச்சைக்காக என் சொந்த ஊரில் இருந்தேன், மீண்டும் பெங்களூருக்கு வந்தேன் அது மீண்டும் மீண்டும் நிகழ்ந்தது, நான் முற்றிலும்

மனச்சோர்வடைந்தேன், ஆவிக்குரிய வாழ்க்கையில் சரிந்தேன், சமாளிக்க முடியவில்லை.

ஜூலை மாதத்தில் இருந்து எங்கள் சபையில் ஏழு நாட்கள் உபவாச ஜெபம் செய்தபோது என் கதை மாறத் தொடங்கியது, அதற்கு முன் ஜூன் 30 ஞாயிற்றுக்கிழமை போதகர் எங்கள் வாழ்க்கையில் பிசாசின் ஆவியை முறியடிப்பதைப் (Breaking the Spirit of Mammon) பற்றி பேசும்போது, நான் பிரசங்கத்தை கவனமாகக் கேட்டேன்.

அன்று என்னுள் ஏதோ கனமாக உணர்ந்தேன் நான் என் ஆவியில் ஒரு சுமையை உணர்ந்தேன். இதை என்னிடம் வெளிப்படுத்தும்படி கர்த்தரிடம் கேட்டேன். கடந்த சில மாதங்களில் நான் எப்போதுமே தசமபாகம் செலுத்திக்கொண்டிருந்தாலும் திடீரென்று என் உடல்நலப் பிரச்சினை தொடங்கிய போது சிறிது மருத்துவச் செலவு அதிகமாக இருந்ததால் நான் தசமபக்தை சரியாக செலுத்தவில்லை. ஆகவே இது நான் செய்துகொண்டிருக்கும் தவறு என்று தேவன் எனக்கு வெளிப்படுத்தினார். பிரசங்கத்திற்குப் பிறகு நான் மன்னிப்புக் கேட்டேன். பிரசாங்கத்திற்குப் பிறகு உடனடியாக நான் என் தொகையை வட்டியுடன் திருப்பிச் செலுத்த தேவனுக்கு வாக்களித்தேன். அந்த நாளிலிருந்து நான் தேவனிடமிருந்து ஆசீர்வாதங்களைப் பெறத் தொடங்கினேன். மறுநாளிலிருந்து (ஜூலை 1) முதல் உபவாச ஜெபம் தொடங்கியது. நான் காலை மற்றும் மாலை ஆராதனைகளில் கலந்துகொண்டு தேவ ஆவியானவருடன் இணைந்திருக்கிறேன். தேவன் பல விஷயங்களை வெளிப்படுத்தினர், அந்த நேரத்தில் இருந்து நான் என் விடுதலையைப் பெறத் தொடங்கினேன்.

உபவாச ஆராதனையின் 2 வது நாளில் போதகர் என்னிடம் “உங்கள் குணப்படுத்துதலுக்காக நீங்கள் ஜெபிக்கக் கூடாது. தேவனிடமிருந்து ஆவிக்குரிய வல்லமையைப் பெற ஜெபிக்க வேண்டும். பின்பு உங்கள் சரீரம் குணமாக நீங்கள் கட்டளையிட வேண்டும்”, என்று கூறினார். நான் அந்த வார்த்தையைப்

பெற்றேன். அந்த வார்த்தையைப் பின்தொடர்ந்தேன். அதை இரவும் பகலும் தியானித்தேன். அடுத்த நாள், நான் ஒரு கனவு கண்டேன். அதில் 15 வருடங்களுக்கு முன்பு என்னுடன் இணைக்கப்பட்ட ஒரு நபரின் சூனியம் பற்றி கடவுள் எனக்குக் காட்டினார். அதிலிருந்து நான் விடுபடுவதாக உணர்ந்தேன். உடனே நான் விழித்தேன். அப்பொழுது முதல் என் சரீரம் பெலப்படத் தொடங்கியது.

அந்த 7 நாட்கள் உபவாசத்தில் கனவுகள் மற்றும் தரிசனங்கள் பெற்றேன், அதை நான் பாஸ்டருடன் பகிர்ந்து கொண்டேன். அதைப் புரிந்துகொள்வதற்கும் ஆவிக்குரிய போராட்டங்களை போராடுவதைப் பற்றியும் அவர் எனக்கு வழிகாட்டினார்.

எனது உடல்நலப் பிரச்சினைக்கான மூலக்காரணம் தெரியவில்லை. ஒரு சம்பவத்தை இங்கே பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். நான் எனது செரிமான சிக்கல்களைப் புரிந்துகொள்ள ஒரு பிரபலமான மருத்துவமனைக்குச் சென்றேன். எங்கள் முறைக்கு காத்திருந்தபோது, நான் நுழைவு வழி பாதையில் நடந்துகொண்டு, அந்நியபாஷைகளில் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தேன், என் மனைவி பிரசங்கங்களைக் கேட்டுக்கொண்டே உட்கார்ந்திருந்தாள். பிரார்த்தனை செய்யும் போது, பெரும் கூட்டத்தின் மத்தியில் யாரோ ஒருவர் எனக்கு அருகில் நிற்பதை உணர்ந்தேன், "நீங்கள் இங்கே என்ன செய்கிறீர்கள், நீங்கள் இன்று இங்கே இருக்கக்கூடாது" என்று என்னிடம் கூறினார். நான் என்ன செய்ய வேண்டும் என்று குழப்பமாக உணர்ந்தேன். உடனே என் மனைவி வந்து என்னிடம் சொன்னாள், நாம் உடனடியாக அந்த இடத்தை விட்டு வெளியேறுவோம் என்று அவள் ஆவியில் உணர்ந்தாள். நாங்கள் மருத்துவமனையில் இருந்து புறப்பட்டு வீட்டிற்கு வந்தோம். அடுத்த நாள் நான் மருத்துவரை அணுக முடியாததால் அதை வெளிப்படுத்த தேவனிடம் ஜெபித்தேன்.

ஜெபிக்கும்போது, ஒரு குறிப்பிட்ட காரணத்திற்காக எனது சக ஊழியரால் செய்யப்பட்ட மற்றொரு சூனியம் பற்றி தேவன்

எனக்குக் காட்டினார். அந்த கோட்டையை உடைக்க தேவன் எனக்கு பெலன் கொடுத்தார், அதை பரிசுத்த ஆவியினால் அழிக்க முடியும் என்று எனக்குத் தெரியும், விடுவிக்கப்பட்டேன். நான் வாந்தியெடுத்தேன், சில துகள்கள் என் உடலில் இருந்து வெளியேறியதைக் கண்டேன்.

சில நாட்களுக்குப் பிறகு, நான் முழுமையான விடுதலையைப் பெற ஜெபித்தேன், ஜெபிக்கும்போது தேவன் என்னிடத்தில் மூதாதையர் சாபங்களைப் பற்றி மற்றொரு வெளிப்பாட்டைக் கொடுத்தார், பரிசுத்த ஆவியானவர் அதிகாரத்திலும் வல்லமையிலும் ஜெபிக்க எனக்கு வழிகாட்டினார். நான் தேவனிடம் ஒப்புக்கொடுத்தேன், கர்த்தர் எனக்கு விடுதலை கொடுத்தார். அதன் பிறகு நான் மூன்று முறை வாந்தி எடுத்தேன். எதோ ஒன்று என் சரீரத்திலிருந்து வெளியேறியதை உணர்ந்தேன்.

ஆவிக்குரிய விடுதலையின் பின்னர் அறுவை சிகிச்சை செய்து புண்களின் தொற்றுநோயை அகற்ற மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதற்கு எனக்கு வழிகாட்டப்பட்டது. தேவனுடைய பிரசன்னம் மற்றும் பாதுகாப்பை நான் முழுவதும் உணர்ந்தேன். முற்றிலும் குணமடைந்து எடை அதிகரிக்கத் தொடங்கியது. அப்போதிருந்து என் சரீரத்தில் எனக்கு எந்த பிரச்சினையும் இல்லை. நான் தேவனால் முழுமையாகப் பயன்படுத்தப்படுகிறேன். உணவில் உள்ள ஒவ்வொரு கட்டுப்பாட்டையும் என்னால் கடக்க முடிந்தது. என்னில் உள்ள அற்புத சுகத்திற்கும் விடுதலைக்கும் தேவனுக்கு நன்றி கூறுகிறேன். கட்டப்பட்ட சங்கிலிகளை உடைத்து என்னை விடுதலை செய்தார். அவர் எனக்காக சிலுவையில் கிரயத்தை செலுத்தியதால் நான் இன்று வெற்றியுள்ள வாழ்க்கை வாழ்கிறேன்

எனது பாஸ்டருக்கு நன்றி சொல்ல எனக்கு வார்த்தைகள் இல்லை. அவர் ஆரம்ப கட்டத்திலிருந்து என்னுடன் நின்று எனக்கு வழிகாட்டினார், என் போராட்டங்களில், நான் தளர்ந்த போது அவர் என்னை ஊக்குவித்தார், இந்த வலி கர்த்தரிடத்தில் இருந்து வந்ததல்ல. இது ஒரு சாட்சியாக மாறும் எனக்கு உறுதியளித்தார்.

அவர் ஆவியில் எனக்காக நின்று , இந்த சூழ்நிலையில் இருந்து நான் வெளியே வர உதவினார்.

என் விடுதலையின் திறவுகோல் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து அதை என் வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துவதே என்பதை நான் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். கர்த்தருடைய வார்த்தையை நான் பாஸ்டரிடமிருந்து பெற்றேன், என் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்களை என்னால் காண முடிந்தது. மிட்வீக் மற்றும் சனிக்கிழமை பிரார்த்தனைகளும் கடவுளிடமிருந்து பெற எனக்கு முழுமையாக உதவியது.

நான் பகிர்ந்து கொள்ளும் மற்றொரு சம்பவம், என்னால் தவறாமல் அலுவலகத்திற்கு செல்ல முடியவில்லை பல மாதங்கள் என் சுகவீனத்திற்காக விடுமுறை எடுத்துக்கொண்டேன். ஒரு நாள் என் அலுவலகத்தைச் சேர்ந்த சீனியர் வி.பி. என்னை அழைத்து அவர்கள் இனி உனக்கு சம்பளம் கொடுக்கப் போவதில்லை என்று சொன்னார்கள். என் நிலைமையை புரிந்து கொள்ளாமல் சாதாரணமாக நினைத்தார்கள். எனது மருத்துவ சான்றிதழ்களை பரிசீலிக்க அவர்கள் தயாராக இல்லை. அவர் என்னை அழைத்தபோது நான் அவரை கையாளும் ஞானத்தை கொள்ளாமல் சாதாரணமாக நினைத்தார்கள் கர்த்தர் எனக்குக் ஞானத்தை கொடுத்தார். ஒரு சில நிபந்தனைகளைப் பற்றி அவரிடம் கேள்வி எழுப்பினேன், இறுதியாக அவரால் எனக்கு பதிலளிக்க முடியவில்லை. அதே நேரத்தில் நான் ஒரு கனவு கண்டேன், அதில் நான் பாஸ்டரிடம் சென்று நிறுவனம் எனக்கு சம்பளம் கொடுக்கத் தயாராக இல்லை என்று சொன்னேன்.அவர் என்னிடம் "கவலைப்பட வேண்டாம் நான் உங்கள் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியை சமாளிப்பேன்" என்று கூறினார். அற்புத அதிசயமாக அடுத்த நாள் நான் எனது சம்பளத்தைப் பெற்றேன்.

என் விடுதலை நாளில் நான் தேவனுடைய வார்த்தையைப் பெற்றேன்.

**புலம்பல் 3:22**

**22. நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை.**

**23. அவைகள் காலைதோறும் புதியவைகள்; உமது உண்மை பெரிதாயிருக்கிறது.**

**24. கர்த்தர் என் பங்கு என்று என் ஆத்துமா சொல்லும்; ஆகையால் அவரிடத்தில் நம்பிக்கைகொண்டிருப்பேன்.**

எல்லா மகிமையும் என் தேவனுக்கு மட்டும். அவரது மகிமைக்காக ஒரு வாழ்க்கையை வாழ்வதை விட மதிப்புமிக்க எதுவும் இல்லை.

***<u>சகோதரர். சைதன்ய குமார்</u>***



என் பெயர் சைதன்யா குமார், எனக்கு ஐ.டி யில் பல தொழில்நுட்பங்கள் மற்றும் நிர்வாகப் பொறுப்புகளில் சுமார் 14 ஆண்டுகள் பணி அனுபவம் உள்ளது. தற்போது நான் அமெரிக்காவைச் சேர்ந்த ஒரு சிறந்த காப்பீட்டு நிறுவனத்தில் கண்டுபிடிப்பு மற்றும் ஆட்டோமேஷன் குழுக்களில் முன்னிலை வகிக்கிறேன்.

எனது குழந்தைப் பருவத்தில், வருடப் பிறப்பு ஆராதனையின் போது (டிசம்பர் 31), எங்கள் சாட்சியங்களைப் பகிர்ந்து கொள்ளும்படி கேட்கப்படுவோம். அதில் எப்போதும் எனது படிப்பில் அதிக மதிப்பெண் பெற்றேன், பதக்கங்களை வென்றேன், எனக்கு வேலை கிடைத்தது, எனது திருமணம் நடந்தது, கர்த்தர் எங்களுக்கு ஒரு குழந்தையை கொடுத்து ஆசீர்வதித்தார், வீடு, கார் தந்து ஆசீர்வதித்தார் போன்ற சாட்சியங்களே இருக்கும்.

ஆனால் நான் இப்போது பகிர்ந்து கொள்ளப் போகிற சாட்சியம் மிகவும் சிறப்பு வாய்ந்தது விலைமதிப்பற்றது. ஏனென்றால் உடனடி அற்புத சுகம் பரிசுத்த ஆவியானவரைப் பெறுதல், அபிஷேகம் தீர்க்கதரிசனம் பாடுதல், பிரார்த்தனை மற்றும் உபவாசம் போன்ற அற்புதமான சாட்சியங்கள் இதில் அடங்கும்! முற்றிலும் வித்தியாசமானது அல்லவா?

பரிசுத்த ஆவியுடனான ஒரு அற்புதமான பயணம் இந்த ஆண்டு உருவாகத் தொடங்கியது. அவற்றில் சிலவற்றைப் பகிர்ந்து கொள்ளும் பாக்கியத்தை நான் பெறுகிறேன். இந்த வாய்ப்பை எனக்கு வழங்கிய எங்கள் சபை மற்றும் போதகர் ஆஸ்வின் ஜேம்ஸ்டட் ஆகியோருக்கு நன்றி.

**உடனடி அற்புத சுகம்:-**

கடந்த சில ஆண்டுகளாக நான் அதிக அளவு கொழுப்பு (கொலஸ்ட்ரால்), இரத்த அழுத்தம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ளேன். இவற்றைக் கட்டுப்படுத்த காலாண்டுக்கு

ஒரு முறை மருத்துவரைச் சந்திக்கவேண்டும். நான் எனது உணவு கட்டுப்பாடைத் தொடங்கினேன். இந்த ஆண்டின் மத்தியில், ஆரோக்கியமாக இருக்க ஒரு உடற்பயிற்சி கூடத்தில் சேர்ந்தேன். உடற்பயிற்சி கூடத்தில் (ஜிம்மில்) உடற்பயிற்சி செய்யும் போது எனது வலது முழங்கையில் காயம் ஏற்பட்டது. அந்த இரவு முழுவதும் என்னால் தாங்க முடியாத வலியினால் தூங்க இயலவில்லை. ஒரு நாள் காத்திருந்து வலி குறையாவிட்டால் மருத்துவமனைக்கு சென்று ஸ்கேன் செய்யலாம் என்று நினைத்தேன். என் தசைநார்களில் எதாவது காயம் இருக்குமோ என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். அதே வலியுடன் நான் ஞாயிற்றுக்கிழமை காலை தேவாலயத்திற்கு வந்தேன். ஆராதனையின் போது, என் வலது கையை என்னால் தூக்க முடியவில்லை, வலி பயங்கரமாக இருந்தது. வலி தாங்க முடியாமல், கர்த்தாவே என்னை சுகமாக்கும் என்று தேவனை ஆராதித்து துதித்து ஜெபித்துக் கொண்டிருந்தேன்



ஆராதனை மற்றும் பிரசங்கத்திற்குப் பிறகு, போதகர் நான் சிலருக்காக ஜெபிக்கப் போகிறேன் என்று கூறினார். ஒரு கையில் மைக்கை வைத்துக் கொண்டு, என் தலையை மறு கையால் தொட்டு எனக்காக ஜெபித்தார். பாஸ்டர் என் தலையைத் தொட்டபோது, என் தோளில் ஒரு பலமான கனமான கையை உணர்ந்தேன். என் தோள்பட்டையில் இருந்து என் மணிக்கட்டு மற்றும் விரல்களுக்கு ஒரு உறைபனி குளிர் மின்னோட்டத்தை உணர்ந்தேன். அதன் பிறகு என் முழங்கையில் எனக்கு ஏற்பட்ட வலியிலிருந்து விடுபட்டேன்.

எந்த வலியும் இல்லை என்று என்னால் நம்ப முடியவில்லை, நான் தேவாலயத்திலிருந்து வெளியேறி, வலியைச் சரிபார்க்க எல்லா விஷயங்களையும் என் கையால் முயற்சித்தேன். நான் வீட்டிற்குச் சென்று கனமான பொருட்களைத் தூக்க முயன்றேன். ஆச்சரியமாக, எந்த வலியும் இல்லாமல் எடையைத் தூக்க என்னால்

முடிந்தது. குணமடைந்த பின் இரண்டு வாரங்களுக்கு, "நான் குணமடைந்த நாளில் என் தோளில் உணர்ந்தது யாருடைய கை?" என்று எனக்குள்ளே கேட்டுக்கொண்டே இருந்தேன். தீர்க்கதரிசி பார்ட்டிங்டன் இஸ்ரேல் எங்கள் சபைக்கு வந்த போது, ஞாயிற்றுக்கிழமை ஆராதனை வேளையில், அவருக்கு ஒரு வெளிப்பாடு இருந்தது சபையில் யாரோ ஒருவருக்கு சில நாட்களுக்கு முன்பு அவரது கையில் ஒரு உடனடி அற்புத சுகம் கிடைத்ததாகவும், ஒரு தேவ தூதன் வந்து அந்த நபரைத் தொட்டதையும் அவர் கண்டார். என் கேள்விக்கு தேவன் தீர்க்கதரிசி மூலம் பதிலளித்ததற்காக நான் ஏசுவைத் துதிக்கிறேன்.

மேலும், பி.எச். நெகேமியா எங்கள் தேவாலயத்திற்கு வந்து, இரத்த அழுத்தம், கொழுப்பு போன்ற இருதய சம்பந்தப்பட்ட உடல்நலப் பிரச்சினைகள் உள்ள அனைவருக்கும் பிரார்த்தனை செய்தபோது, நானும் குணமடைய பிரார்த்தனை செய்தேன். "ஆண்டவரே நான் பல ஆண்டுகளாக மருத்துவர்களைக் கலந்தாலோசிக்கிறேன், இரத்த அழுத்தம் மற்றும் கொழுப்புகளுக்கு நிறைய மருந்துகளை எடுத்துக்கொள்கிறேன், இந்த மருந்துகளை நான் எவ்வளவு காலம் தொடருவேன்? தயவுசெய்து என்னை குணமாக்குங்கள்" என்று ஜெபித்தேன். அடுத்த முறை நான் மருத்துவரைப் பார்க்கச் சென்றபோது, ஆச்சரியப்படும் விதமாக, "உங்கள் மருத்துவ அறிக்கைகள் அனைத்தும் இயல்பாக இருக்கின்றது, நீங்கள் மருந்துகளை உட்கொள்வதை நிறுத்தலாம்!" என்று கூறினார். என்னால் நம்ப முடியவில்லை! கடவுளைத் துதியுங்கள், அல்லேலூயா!!!

பரிசுத்த ஆவியானவரைப் பெறுதல்:-

குழந்தைப் பருவத்திலிருந்தே நான் மிகவும் அமைதியாக இருந்த ஒரு சபைக்கு செல்வேன், ஆராதனை எந்த உணர்ச்சிகளும் இல்லாமல் இருந்தது. நான் சில பெந்தேகோஸ்தே தேவாலயங்கள், கூட்டங்கள் மற்றும் மாநாடுகளுக்குச் சென்றிருக்கிறேன், அங்கு நான் பரிசுத்த ஆவியானவர் இருப்பதைக் கண்டு பயந்தேன், அது

என்னவென்று புரியவில்லை, இந்த இடங்களிலிருந்து விலகி இருக்க முயற்சித்தேன். ஆனால் எங்கள் தேவாலயத்தில், ஈஸ்டர் காலத்தில், போதகர் பிரார்த்தனைக் குழுவைத் தொடங்கியபோது, ஆரம்பத்தில் நான் மாலை ஆராதனையில் கலந்து கொள்ள விரும்பவில்லை, ஏனென்றால் பரிசுத்த ஆவியானவர் என்ற வார்த்தை, அந்நியபாஷைகளில் பேசுவது எனக்கு மிகவும் சங்கடமாக இருந்தது. நான் கலந்துகொள்ள மிகவும் தயங்கினேன், ஆனால் நான் இல்லாவிட்டால் போதகர் என்னைப் பற்றி வித்தியாசமாக நினைப்பார் என்று நினைத்தேன். சில நேரங்களில், நான் தனியாக வந்து தேவாலயத்திற்கு வெளியே நின்று பிரார்த்தனை முடியும் வரை காத்திருந்து, போதகரின் செய்தி தொடங்கும் போது உள்ளே சென்று, அது முடியும் வரை பொறுமையின்றி காத்திருக்கிறேன். நான் தேவனிடம் “எல்லோரும் என்ன செய்கிறார்கள்? இது என்ன? நான் ஏன் இங்கே இருக்கிறேன்? என்று பல கேள்விகள் கேட்பேன்.

எங்கள் பாஸ்டர் நான் ஒருபோதும் உபயோகிக்காத வாட்ஸ்அப் குழுவில் நிறைய வீடியோக்களை அனுப்புவார். ஆனால் இறுதியில் நான் வீடியோக்களைப் பார்க்கவும், பரிசுத்த ஆவியானவரைப் பற்றி ஆன்லைனில் படிக்கவும் ஆரம்பித்தேன். "கர்த்தாவே, உம்மோடு இணைந்திருப்பதினால் இவ்வளவு பெலன் எனக்கு கிடைத்தால், பரிசுத்த ஆவியானவர் என் மீது இருக்க விரும்புகிறேன்." என்று பிரார்த்தனை செய்தேன்,

முதல் முறையாக, நான் எனது முழு குடும்பத்தினருடனும் இரவு பிரார்த்தனைக்கு வந்தேன், அன்றைய பிற்பகலில் எனக்காக ஜெபிப்பதாக பாஸ்டர் கூறினார். செய்திக்குப் பிறகு, பிரார்த்தனை தொடங்கியபோது, போதகர் ஒரு சிலரைத் தொட்டு ஜெபிக்கப் போவதாகக் கூறினார். அவர் வந்து என்னைத் தொட்டார். நான் பரிசுத்த ஆவியானவரை தேவனிடம் கேட்டு ஜெபித்துக் கொண்டிருந்தேன். ஆனால், எனக்கு எந்த வித்தியாசமும் இல்லை. இரண்டாவது முறை, பாஸ்டர் சில வார்த்தைகளைப் பிரசங்கித்தார் “உங்கள் கைகளை நகர்த்துங்கள், கைகளை அசைத்து, சுதந்திரமாக இருங்கள், நீங்கள் குற்ற உணர்ச்சியுடன் இருந்தால்,

மன்னிப்பு கேளுங்கள், பரிசுத்த ஆவியானவர் உங்களை பரிசுத்தமாக்குவார். தொடர்ந்து ஜெபியுங்கள், தேடுங்கள், நம்புங்கள், நீங்கள் அதைப் பெறுவீர்கள்" என்று கூறினார். "என்னை பரிசுத்தமாக்குங்கள், என் பாவங்களை மன்னியுங்கள், நான் உம்மைத் தேட விரும்புகிறேன், நான் உம்மை வாஞ்சிக்கிறேன்" என்று ஜெபிக்கத் தொடங்கினேன். போதகர் என்னை மீண்டும் தொட்டபோது, பரிசுத்த ஆவியை உணர்ந்தேன். என்னால் தாங்க முடியாத ஒரு பிரகாசமான ஒளி இருந்தது, என்னால் தூக்க முடியாத ஒரு கனமான எடை இருந்தது, நான் கனமாக சுவாசித்தேன். முழு உடலும், குறிப்பாக கைகள் நெருப்பைப் போல எரிந்து கொண்டிருந்தன! அது ஒரு மணி நேரத்திற்கும் மேலாக இருந்தது. என்னால் ஒருபோதும் மறக்க முடியாத ஒரு இனிமையான உணர்வு அது. அப்போதிருந்து, என்னுடன் யாரோ ஒருவர் இருக்கிறார், எல்லா நேரத்திலும் ஒரு குரலால் என்னை வழிநடத்துகிறார் என்று நான் எப்போதும் உணர்கிறேன். என் வாழ்க்கை மாறியது. நான் எப்போதும் என் தேவனுக்காக பாட விரும்புகிறேன், அவரை மகிமைப்படுத்தவும், அவருடைய பிரசன்னத்தில் இருக்கவும் விரும்புகிறேன்.

முன்பு நான் பாம்புகளை மிகவும் விரும்பினேன். தொலைக்காட்சியில், மிருகக்காட்சிசாலையில் அவற்றைப் பார்க்க விரும்பினேன். நிறைய மோசமான கனவுகளைக் கண்டேன். ஆனால் பரிசுத்த ஆவியானவரைப் பெற்ற பிறகு, நான் பாம்புகளைப் பார்க்க விரும்பவில்லை, அவற்றை என்னால் பொறுத்துக்கொள்ள முடியாது. எனக்கு எந்த பாம்பு கனவுகளோ கெட்ட கனவுகளோ வரவில்லை. நான் முற்றிலும் விடுவிக்கப்பட்டேன்.

நான் பரிசுத்த ஆவியானவரைப் பெற்ற நாளிலிருந்து, இன்றுவரை, அதிகாலையில், "நான் பரிசுத்தவான்களின் பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழைகிறேன்" என்ற பாடலைக் கேட்கிறேன், நான் எழுந்து ஜெபிக்க விரும்புகிறேன், அவருடைய பிரசன்னத்தில் இருக்க விரும்புகிறேன். என் பிராத்தனை உலக ஆசீர்வாதங்களை பெறுவதற்காக அல்ல. ஆனால், பெரும்பாலும் என் வாழ்க்கையில்

புதிதாக ஒன்றைச் செய்வது, தேவனுடைய பிரசன்னத்தில் இருப்பது, என் வாழ்க்கையிலும் பிறரது வாழ்க்கையிலும் அற்புதங்களை பெறுவதற்காக மட்டுமே.

நான் எப்போதும் உபவாசத்திற்கு எதிராக இருந்தேன், நான் ஒருபோதும் உபவாசம் இருந்ததில்லை. நாம் உபவாசிக்கும் பொது எப்பொழுது இது முடிவுக்கு வரும் என்று நம் மனம் நினைத்துக் கொண்டே இருக்கும் என்று நம்பினேன். நான் எப்போது உபவாசத்தை முடிப்பேன்? உபவாசம் முடிந்தவுடன் நான் பிரியாணி சாப்பிடலாம் என்று நினைப்பேன்.

ஜெபிப்பதற்கு ஒரு பட்டியலை தயாரித்து தேவனிடம் அதை கொடுக்கும் படி பிராத்தனை செய்வேன். ஆனால் பரிசுத்த ஆவியானவரைப் பெற்ற பிறகு, உபவாசிக்க விரும்புகிறேன். நான் எங்கள் போதகரிடமும் இதை கூறி, நான் உபவாசிக்கத் தொடங்கினேன். நான் செய்ததெல்லாம் வீட்டில் என்னைப் பூட்டிக் கொண்டு, எனது தொலைபேசியை விமானப் பயன்முறையில் வைத்து விட்டு, என் இயேசுவைப் புகழ்ந்து பாடுவது, பைபிளைப் படிப்பது, தேவ வல்லமை மிக்க மனிதர்களின் பிரசங்கங்களைப் பார்ப்பது மட்டுமே. மாலை நேரமாகியும், நான் பசியுடன் இருக்கவில்லை, என் மனம் உணவை நோக்கி ஈர்க்கப்படவில்லை, பிரார்த்தனை புள்ளிகள் இல்லை, என் மகிழ்ச்சியை வார்த்தைகளில் வெளிப்படுத்த முடியாத அளவுக்கு நான் நிதானமாகவும் வலுவாகவும் உணர்ந்தேன். தேவனுடைய பிரசன்னத்தையும் பரிசுத்த ஆவியின் வல்லமையையும் நான் உணர்ந்தேன்!

என்னை எப்போதும் அவருடைய பிரசன்னத்தில் வைத்திருக்கும்படி என் தேவனிடம் ஒரு பிரார்த்தனையுடன் முடிக்க விரும்புகிறேன். தேவனைத் துதியுங்கள், ஆமென்! அல்லேலூயா

We are now on Facebook, Instagram, Twitter and Youtube

Kindly follow us.

**https://www.youtube.com/eternallightAGchurch**

**https://www.instagram.com/elagchurch**

**https://www.twitter.com/ELAGchurch**

**https://www.facebook.com/ELAGChurch/**

We welcome your valuable feedback to **elagliterature@gmail.com.**

## போதகரை பற்றி



Ps. ஆஸ்வின் ஜேம்ஸ்டட் அவர்கள் ELAG சபையின் தலைமை போதகர்.

இவர் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டு, தன் செய்திகளின் மூலம் பல ஆத்துமாக்களை உயிர்ப்பிக்கும், வல்லமையான, அபிஷேகம் பண்ணப்பட்ட தேவ மனிதர். இவர் தம் கல்லூரி காலங்களில் இருந்து பகுதி நேர ஊழியம் செய்து வந்தார்.

இறையியல் பட்டதாரியான இவர், 1999 முதல் முழுநேர ஊழியம் செய்து வருகிறார். தேவ ஆவியானவரின் அபிஷேகம் நிறைந்த இவருடைய வார்த்தைகள் பலர் வாழ்வில் எழுப்புதலையும், வாழ்வாதாரத்தை உயிர்ப்பித்தும் உள்ளது. தேவ ஆவியானவரின் அபிஷேகம் நிறைந்த இவருடைய கூட்டங்களில், மக்கள் தொடப்பட்டு, தெய்வீக சுகமும், விடுதலையும் பெற்றுள்ளனர்.

இவருடைய ஊழியப் பாதையில் உணர்ச்சி பூர்வமான விடுதலை சரீரப் பூர்வமான விடுதலை, பிசாசின் கட்டுகளிலிருந்து விடுதலை மற்றும் பில்லி சூனிய கட்டுகளிலிருந்து விடுதலை போன்ற பல்வேறு நிலைகளில் கர்த்தர் இவரை வல்லமையாகப் பயன்படுத்தி வருகிறார். இவருடைய ஊழியத்தின் நோக்கம் மக்களின் வாழ்வை மாற்றி, அவர்களை முழு விடுதலைக்குள்ளாக நடத்தி, கிறிஸ்துவுக்குள் தங்களுடைய அதிகாரத்தை உணரவும் வழிநடத்துகிறது.

கர்த்தர் இவரை இளைஞர்கள் மற்றும் குடும்பங்களின் மத்தியில் பயன்படுத்தி, அவர்கள் தேவனில் அடுத்த நிலைக்குள்ளாக கடந்து செல்லவும், தேவனுடைய பிள்ளைகளுக்குண்டான அதிகாரத்தை தங்கள் வாழ்வில் பயன்படுத்தவும் வழிநடத்துகிறார். தேவ ராஜ்ஜியத்தின் மேல் உள்ள இவருடைய பேரார்வம் இவரது செய்திகளில் வெளிப்பட்டு அதை கேட்கும் மக்களின் இருதயங்களில் கர்த்தரின் மேலான பேரார்வத்தைத் தூண்டுகிறது.

## சபையைப் பற்றி

ELAG சபை 4 பேருடன் 2013ல் எளிமையாக ஆரம்பிக்கப்பட்டது. விசுவாசத்துடன் சிறுகூட்டமாகத் துவங்கினோம். ஆவிக்குரிய அதிகாரத்திலும் வல்லமையிலும் நடக்கிற தேவ பிள்ளைகளை உருவாக்கி உலகமெங்கிலும் சுவிஷேசத்தை அறிவித்து, தேவனுடைய ராஜ்ஜியத்தைக் கட்டுவதே நம்முடைய நோக்கம்.

## புத்தகத்தைப் பற்றி

இந்த புத்தகம் சபையின் இலக்கிய ஊழியக் குழுவால் உருவாக்கப்பட்டது. நமது சபையின் தலைமை போதகரால், ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமை கொடுக்கப்படும் செய்திகள் அனைத்தும் தொகுக்கப்பட்டு கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் பிரயோஜனத்திற்காக, வெளியிடப்பட்டுள்ளது. இப்புத்தகமானது உங்கள் வளர்ச்சிக்கும் ஆசிர்வாதத்திற்கும் ஏதுவாக அமையட்டும் என்று நாங்கள் வாழ்த்துகிறோம்.

ETERNAL LIGHT AG
*let your light shine*

**Eternal Light AG Church**
Opp. to St.Xavier's School,
2nd Cross, Beddadasapura Road,
Electronic City Phase I,
Bengaluru-560100,
Karnataka, India

**Sunday Services**
English : 9AM - 11AM Hindi: 5:30PM - 7PM
Tamil : 11:30AM - 01:30PM
Mob : 6364066791 / 6364066792
E-mail : ecitycf@gmail.com
Web : www.elagchurch.com